"ஈசன் நெறிபரப்ப இன்தமிழ் வளர்ப்போம்"

# கலசம்

# KALASAM

ஐப்பசி - கார்த்திகை - மார்கழி - 2018




ISSN 2055-6616

இலண்டனிலிருந்து இலவசமாக வெளிவரும் முதல் ஆன்மிகக் காலாண்டிதழ்

21

# RUBY'S

CATERING

020 8799 7180

www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk

உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு





திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா
கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்
அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா





ACCREDITED SRILANKAN CATERERS @

Hilton

உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற
தரம் மிகு இலங்கை மற்றும்
தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......

Tel: 020 8799 7180
mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk

மணி 26

# கலசம்
KALASAM

ஒலி 91

www.saivamunnettasangam.com

Charity Registration No:292085

FREE ISSUE

கலசம்
நிருவாகக் குழு

ஆசிரியர்
க ஜெகதீஸ்வரன்

உதவி ஆசிரியர்கள்
வை சிவனருட்செல்வர்
சி அற்புதானந்தன்

விநியோகம்
சோ நிரஞ்சன்

விளம்பரம்
தொடர்புகள்
மா இந்துசேகரன்

நிருவாகம்
வ இ இராமநாதன்

வெளியீடு
சைவ முன்னேற்றச்
சங்கம்

முகவரி
SMS
2 Salisbury Road
Manor Park
London E12 6AB

Tel/ Fax:
020 8514 4732

மின்னஞ்சல்
email:
smsukkalasam@gmail.com

## வலம்வரும் நேரம்

கோயிலில் அபிடேகம் நடக்கும்போதும், அலங்காரம் முடிந்தபின் பூசை வழிபாடு நடக்கும்போதும். திருவிழாக் காலங்களில், கொடிமரத்துக்கும் உற்சவ மூர்த்திகளுக்கும் பூசை நடக்கும்போதும் அவற்றைப் பார்த்து வழிபடாது கோயிலை வலம்வருவதிலேயே சிலர் ஈடுபடுவதைக் காண முடிகிறது. சிலர் கோயிலுக்குள் நுழைந்த உடனேயே வலம்வர ஆரம்பிக்கிறார்கள். அதனால் இந்த "விசேட பூசை"களைப் பார்த்து அந்தந்தச் சந்நிதிகளில் நின்று வணங்குபவர்கள் சரியாக வணங்க முடியாமல் பாதிக்கப்படுகிறார்கள். **பூசை நேரங்களில் வலம் வருபவர்கள், முறை தெரியாமல் அல்லது மற்றவர்களுக்கு இடையூறாக இருக்கிறோம் என்பது தெரியாமலேயே இப்படிச் செய்கிறார்கள்** என்று தான் எண்ணவேண்டியுள்ளது. வேறு சிலர் சந்நிதிகளில் மூடித் திரை போட்டிருக்கும்போதும் வலம் வருகிறார்கள். இப்படி **மற்றவர்களுக்கு இடையூறாவும், சந்நிதிக்குத் திரைபோட்டிருக்கும்போதும் வலம் வருவது ஆலயவழிபாட்டு விதிகளுக்கு மாறானது; தவிர்க்கப்படவேண்டியது.**

இறைவனை வழிபடவென நாம் ஆலயம் செல்கிறோம். எம்மைப்போலவே மற்றையவர்களும் அதே காரணத்துக்காகத்தான் கோயிலுக்கு வருகிறார்கள். **நமக்குக் கோயிலில் வழிபட எவ்வளவு உரிமை, சுதந்திரம் இருக்கிறதோ அதேயளவு உரிமையும் சுதந்திரமும் மற்றவர்களுக்கும் உண்டு என்பதை நாம் மனத்திருத்தல் வேண்டும்.** ஆகவே நாம் வழிபடும்போது மற்றவர்களுக்கு, அவர்கள் வழிபடுவதற்கு இடையூறு ஏற்படுத்தாமல் வழிபாடு செய்யவேண்டியது முக்கியம்; எமது கடமையும் அதுதான். தீபாரதனை, உபசாரம் முதலியவற்றை மற்றவர்களும் பார்க்கும் வகையில் ஒதுங்கி நின்று வழிபடுதல் நன்று.

கோயிலிலே அறங்காவலர்களோ சிவாசாரியர்களோ இப்படியான தவறு இளைப்பவர்களுக்கு, அவர்களின் தவற்றைச் சுட்டிக்காட்டி, எடுத்துச் சொல்லி அடியார்களுக்கு வழிகாட்டவேண்டும். அப்படிச் செய்வதற்கு; சொல்வதற்கு சிவாசாரியர்களுக்கு நேரமில்லை, அறங்காவலர் சிலருக்கு இதுபற்றித் தெரியாது என்றே நினைக்கவேண்டியுள்ளது. இது வேதனையான விஷயம்.

அப்படியானால் எப்போது கோயிலை வலம் வரலாம் என்ற கேள்வி எழுகின்றது. **பூசைகள் வழிபாடுகள் முடிந்தபின்னர், திருவிழாக் காலங்களில் உற்சவம் முடிந்தபின்னர் வலம்வருவதே முறையானதும், எல்லோருக்கும் வசதியானதுமாகும்.** இதை நாம் நினைவிற் கொண்டு செயற்படுவது அனைவருக்கும் நல்லது.

**க. ஜெகதீஸ்வரன் - ஆசிரியர்**

# இந்த இதழில்


| | |
|---|---|
| சம்பந்தரும் கம்பரும் | 03 |
| கற்குடி மாமலையார் | 05 |
| சங்கநாதம் - கந்தபுராணச் சிந்தனைகள் | 09 |
| கற்பக விநாயகரும் வலஞ்சுழி விநாயகரும் | 11 |
| இங்குனைப் போற்றச்சொல் ஏது? | 16 |
| அணுவில் நின்றாடுகிறான் | 17 |
| உடம்புக்கு ஏற்ற உணவு | 18 |
| ஞானமும் கல்வியும் | 31 |
| கண்ணனும் தாத்தாவும் | 33 |
| திருவாவடுதுறை திருத்தலத்தின் சிறப்புக்கள் | 37 |
| திகைக்க வைக்கும் தில்லை | 38 |
| Hinduism in search of Answers | 41 |
| அன்புள்ள ஆசிரியருக்கு | 47 |


அட்டைப்படம்: கூகிள் மின்னம்பலம்

# சம்பந்தரும் கம்பரும்

க. உமாமகேசுவரன்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவையாறு என்ற திருத்தலத்துக்கு வருகிறார். கோயிலின் பிரகார எல்லைக்கப்பால் நெடிதுயர்ந்து வானளாவும் மரங்கள். மரங்களில் மந்திகள். ஆலய நாயகராகிய பிரணதார்த்திஹரர் உற்சவம் கொண்டருளும் காலம். மயில்போன்ற சாயலை உடைய பக்தைகள் நடனமாடியபடி வலம் வருகிறார்கள். நடனம் ஆடும் பெண் ஒவ்வொருத்தியும் **"பொய்யோவெனும் இடையாள்"**. அவர்கள் நடனம் ஆடும்பொழுது அவர்களின் இடைகளின் அசைவு பளிச் பளிச்சென்று மின்னுவதுபோலத் தோன்றுகின்றது. நடனத்துக்கு இசைவாக முழவு (மிருதங்கம்) அதிர்கிறது.

அது (முழவு) இடி இடிப்பதுபோல் இருக்கிறது. மந்திகளுக்கு மழையென்றால் அளவுக்கு அதிகமான அச்சம். அவை வசிப்பதற்குக் கூடோ, குகையோ தேடுவதில்லை. ஆனால் மழை வரப்போகிறது என்பதைச் சில அறிகுறிகளால் அறிந்து மரங்களின் இலை அடர்ந்த பகுதிகளுக்கு ஓடித் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளும். **இடி, மின்னல், கருமுகில், மயில்களின் நடனம் என்பனவே மழை வரப்போகிறது என்பதை அவை உணர்வதற்கான அறிகுறிகளாம்.** குரங்குகள் விழா நிகழ்ச்சிகளை அவதானித்தபடி மரங்களில் அமர்ந்திருக்கின்றன. **சில குரங்குகள் முழவின் ஓசையை இடியென நினைத்து மயங்கிவிடுகின்றன.** "பொய்யோவெனும் இடை" தோன்றி மறைவதை மின்னலென, அதே **சில** குரங்குகள் அர்த்தப்படுத்திக் கொள்கின்றன. தமது சந்தேகத்தை நீக்கிக் கொள்வதற்கு **"மரமேறி முகில் பார்"**க்கின்றன.

**சில** குரங்குகள்தான் இப்படிப் பரபரப்படைகின்றன. ஏனைய குரங்குகள் அமைதியாக அமர்ந்து விழாக்கோலத்தில் திழைக்கின்றன. ஏன் சில குரங்குகள் மட்டும் பரபரப்படைகின்றன? என்பது கேள்வி. இந்தச் **சில** குரங்குகள் இப்போதுதான் புதிதாக வந்தவை. இங்கேயே நீண்டகாலம் வாழும் குரங்குகளுக்கு இவை மழைக்கான அறிகுறியல்ல; உற்சவத்தோடு சம்பந்தமுடைய விடயங்கள் என்பது தெரியும். தல தரிசனத்துக்காக வந்த சம்பந்த சுவாமிகள் தமது திருப் பாடலிலே அழகாக இக்காட்சியைப் படம் பிடித்துக் காட்டுகிறார்.

**புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி**
**அறிவழிந்திட் டைம்மே லுந்தி**
**அலமந்த போதாக அஞ்சேலென்**
**றருள்செய்வா னமருங் கோயில்**
**வலம்வந்த மடவார்கள் நடமாட**
**முழவதிர மழையென் றஞ்சிச்**
**சிலமந்தி யலமந்து மரமேறி**
**முகில்பார்க்குந் திருவை யாறே**

கம்பனைக் கல்வியில் பெரியன் என்று பாராட்டுவது மரபு. கல்வியிற் பெரியன் என்பதனாலே அவன் சைவத் திருமுறைகளையும் பயின்றிருக்கக்கூடும் என்று எண்ணத் தோன்றுகிறது. ஏனெனில், இரண்டெழுத்தை உபயோகித்து நுட்பமான ஒரு கருத்தைச் சம்பந்தர் புலப்படுத்தியது போலவே கம்பரும் புலப்படுத்தியுள்ளார். சுந்தர காண்டம் காட்சிப்படலத்தில் வரும் பாடலொன்றில்

சம்பந்தசுவாமிகளின் இரண்டெழுத்து உத்தியைக் கம்பனும் கையாண்டிருக்கக் காணலாம். ஒரு பாத்திரத்தின் பண்பைப் புலப்படுத்த இரண்டே இரண்டு எழுத்துக்களைப் பயன்படுத்திக் காட்டும் திறனைக் கம்பன் சம்பந்த சுவாமிகளிடந்தான் பயின்றிருக்கவேண்டும்.

சுவாமிகளுக்கு ஐந்து நூற்றாண்டுகளுக்குப் பின் தோன்றிய கம்பன், அசோகவனத்தில் அரக்கியரிடை சீதையைக் கொல்லாமல் கொல்லும் நினைவுகளை விவரிக்கிறான். இராமர் வனவாசத்தின்போது உணவாக ஏற்றது இலை தழைகளைத்தான். **"இலக்குவன் இருக்கிறான், மரத்தையே தறித்துக்கொண்டுவந்து போட்டுவிடுவான். வேண்டிய இலை, தழை கிடைக்கும். ஆனால் அருகில் நான் இல்லையே! நானிருந்தால் தறித்துப் போடப்பட்ட மரத்தில் இருந்து உண்பதற்கேற்ற மென்மையான இலைகளைத் தேர்தெடுத்துக் கொடுப்பேனே! இப்போது நான் அங்கு இல்லையே!"** என்று ஏங்குகிறாள் சீதை. இது அவளின் இல்லற மாண்பை எடுத்துக் காட்டுகிறது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பாடவரும்போது கம்பன் சம்பந்த சுவாமியை ஒருதடவை நினைத்துக்கொள்ளுகிறான். அடுத்த கணம் **"அருந்தும் மெல்லடகு ஆரிட அருந்தும் என்று அழுங்கும்"** என்று பாடிவிடுகிறான்.

அருந்தும் மெல்லடகு ஆரிட அருந்துமென் றழுங்கும்
விருந்து கண்டபோ தென்னுறு மோஎன்று விம்மும்
மருந்து முண்டுகொல் யான்கொண்ட நோய்க்கென்று மயங்கும்
இருந்த மாநிலம் செல்லரித் திடவுமாண் டெழாதாள்

**"அடகு (இலை) கிடைக்கும். ஆனால் மெல்லடகு கிடைப்பதற்கான வாய்ப்பு இல்லையே. அதற்கு நான் அங்கே இருக்கவேண்டும்"** என்று ஏங்குகிறாள் சீதை. சம்பந்த சுவாமிகள் **"சில"** என்ற இரண்டெழுத்துச் சொல்லால் நுட்பமான கருத்தைப் புலப்படுத்தியதுபோலக் கம்பனும் **"மெல்"** என்ற இரண்டெழுத்துச் சொல்லால் சீதையின் இல்லற மாண்பைப் புலப்படுத்திவிடுகிறான். இந்த நுட்பமான உத்தியைத் தனக்கு உதவிய சம்பந்த சுவாமிகளை அவன் நன்றியோடு போற்றியிருப்பான் என்பதற்கு எதுவித ஐயமுமில்லை.

## "திருமுருகாற்றுப்படை படிக்கச் சொல்லு..."

சென்னை எண்ணூருக்குச் சற்றுத் தொலைவில் உள்ளது காட்டுப்பள்ளி என்றும் சிறு கிராமம். அந்தக் கிராமத்தை அடையவேண்டுமானால், தரை மார்க்கம் இல்லை. படகு வழியேதான் போகவேண்டும். அங்கே காஞ்சிப் பெரியவர் ஒரு காலம் தங்கியிருந்தார். பல பக்தர்கள் படகுமூலம் போய் அவரைப் பார்த்து வந்தனர்.

அந்தச் சமயம் வானதி திருநாவுக்கரசுவின் தங்கை மீனாளுக்கு உடல் நலம், மனநலம் இரண்டும் குன்றியிருந்தன. பிரமை பிடித்தவர்போல இருந்தார். அவரை அழைத்துக்கொண்டு, குடும்பமாக மகா பெரியவரிடம் போனார்கள். தங்கையின் உடல் நிலைபற்றித் திருநாவுக்கரசு பெரியவரிடம் சொன்னார். சிறிது நேரம் அவர்களைப் பார்த்துவிட்டு, "அவளைத் தினமும் திருமுருகாற்றுப்படை படிக்கச் சொல்லு" என்றார். "அவளுக்கு அதிகம் படிக்கத் தெரியாதே" என்றார் திருநாவுக்கரசு. "அதனாலென்ன? வேறு யாரையாவது படிக்கச் சொல்லு. காதில் விழுந்தால் சரி" என்றார் பெரியவர். பின் அவர்களுக்கு உணவும் வழங்கி அனுப்பிவைத்தார்.

அவர்கள் திரும்பி வந்து ஒரு மாதம் பெரியவர் சொன்னதுபோல திருமுருகாற்றுப்படை படித்தார்கள். மீனாள் முழுமையாகக் குணமடைந்தார். மனக்கோளறும் முழுமையாக விலகி இயல்பு நிலைக்கு வந்தார். இது பெரியவரின் பேரருள்தான் என்றார் திருநாவுக்கரசு.

**தகவல்: முனைவர் சாரதா நம்பியாரூரன்**

# கற்குடி மாமலையார்

வித்துவான் க. வேந்தனார்

**வித்துவான் க. வேந்தனார் அவர்கள் பிறந்து, 2018 நவம்பர் மாதம் 5ஆம் திகதி, நூறு ஆண்டுகள் ஆகின்றன. அவரின் நூற்றாண்டு விழா அடுத்த ஆண்டில் (2019) நடைபெறவுள்ளது என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம். தமிழுக்கும் சைவத்துக்கும் ஈழத்தில் அவர் ஆற்றிய சேவையைத் தமிழ் மக்கள் எவரும் மறந்துவிட முடியாது. அவரின் "தன்னேர் இல்லாத தமிழ்" என்ற நூலில் இருந்து கலசத்தில் கட்டுரைகள் பிரசுரமாகின்றன. அந்த வரிசையில் இது மூன்றாவது கட்டுரையாகும்.**

கற்குடி மாமலையின்கண் எழுந்தருளிய கண்ணுதற்கடவுளை, ஆலமுண்ட நீலகண்டனைத் தொழுது நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தப் பெருமான் பாடினார். ஆலத்தை அமுதாக உண்டு அமரரை உய்யக்கொண்ட ஈசனின் பெருங் கருணையை எண்ணி எண்ணி வியந்தார். அமுது எழும் என்னும் ஆர்வத்துடன் அமரர்கள் திருப்பாற் கடலைக் கடைந்தார்கள். முழுமுதல் இறைவனாகிய சிவனைத் தொழுது கடையத் தொடங்காமல் தம்முனைப்புடன் தொடங்கினார்கள். அமுதை உண்டு சாவாமல் வாழலாம் என்ற எண்ணத்தினால் ஈசனின் அருளை மறந்துவிட்டார்கள். அமுதம் எழவில்லை. ஆலகால விடம் என்னும் நஞ்சம் எழுந்தது. நஞ்சைக் கண்ட அமரர்கள் நடுங்கினார்கள். நஞ்சின் வேகத்தைத் தாங்கமுடியாமல் அஞ்சி ஓடினார்கள். ஈசன் திருமுன்னிலையை அடைந்து எங்களைக் காத்தருளவேண்டும் என்று கதறினார்கள். அமரர்களின் அல்லலையும் ஆலகால விடத்தின் வேகத்தையும் கண்ட ஈசன் ஆலத்தை அமுதாக உண்டு அமரரைக் காத்தருளினார். இவ்வாறு ஆலமென்னுங் கொடிய நஞ்சை அமுதாகத் தாம் உண்டு அமரரைக் காத்த ஈசனின் இன்னருளை எண்ணிய திருஞான சம்பந்தர்,

**ஒருங்களி நீஇறை வாஎன்று உம்பர்கள் ஓலமிடக் கண்டு**
**இருங்களம் ஆர விடத்தை இன்னமுது உண்ணிய ஈசர்**

எனப் போற்றுகிறார்.

**உம்பர்கள் ஓலமிட:**

இறைவனை மறந்த அமரர்கள், நஞ்சின் வெம்மையைத் தம்மால் தாங்கமுடியாத நிலையிலேதான் இறைவனை எண்ணினார்கள். அமரர்கள் எல்லோரும் அழியப்போகின்றோம், இறைவனே இனி உமது இன்னருள்தான் எமக்குப் புகல், அமுதத்தை உண்டு அழிவில்லாமல் வாழலாம் என்று மகிழ்ந்தோம், ஆலமென்னும் கொடிய நஞ்சம் எழுந்து எம்மை நலிகின்றது, திருவருளை முன்னிட்டுத் தொடங்காத எமது பிழையைப் பொறுத்தருள்க, எமது இன்னலைப் போக்கியருள்க என்று புலம்பினார்கள்; ஓலமிட்டார்கள். அமரர்கள் அஞ்சி ஓலமிட்டு அடைக்கலம் புகுந்தவுடன் இறைவன் இரங்கிவிட்டார். ஆலமென்னும் கொடிய நஞ்சை அள்ளி அமுதம்போல் உண்டார்.

**ஒருங்களிநீ இறைவா என்று உம்பர்கள் ஓலமிடக் கண்டு**

என்னுந் தொடர்களால் அமரர்கள் அஞ்சி அலறி ஓலமிட்ட அல்லல் நிலையை அப்படியே சம்பந்தப் பெருமான் உணர்த்துகின்றார்.

**"இறைவா நீ ஒருங்கு அளி"** என்பதால் நாங்கள் நீர்தான் முழுமுதல் இறைவன் என்பதை உணர்ந்துவிட்டோம், நீர்தான் எங்களைக் காப்பாற்றி அருளும் கருணையாளன் என அமரர்கள் தம்

தன்மை கெட்டு இறைவனிடத்தில் தம்மை ஒப்படைக்கின்ற; தான் அதுவாம் தரத்தைக் காண்கின்றோம்.

உலகப் பற்றில் மூழ்கி, இறைவனின் திருவருளை மறந்து, போகப் பொருளைப் பெறுதற்காக மக்கள் முயலுகின்ற நிலையை அமரர்கள் அமுதத்தைப் பெறும் வண்ணம் திருப்பாற்கடலைக் கடைந்த செயல் குறிப்பாகக் காட்டுகின்றது. இன்பமெனத் தாம் எண்ணி முயன்று அடைந்த உலகபோகங்கள் யாவும் திருவருளை மறத்தற்கு ஏதுவாகித் துன்பம் தருதலை உணர்ந்து, இறைவனின் அருளைப் பெற்று உய்வடைய முயலும் மக்களின் நிலையை ஆலத்தைக் கண்டு அஞ்சி இறைவனிடம் அடைக்கலம் புகுந்த அமரர்களின் செயல் குறிப்பாகக் காட்டுகின்றது.

அமரர்களின் அல்லலைக் கண்டு ஆலத்தை அமுதாக உண்டருளிய இறைவனின் அருட்செயலை பாலறாவாயர் ஆகிய ஞானசம்பந்தப் பெருமான் பாடிப்பாடி வியக்கின்றார்.

**"இருங்களம் ஆர விடத்தை இன்னமுது உண்ணிய ஈசர்"**

ஆலமுண்ட ஈசனின் திருக்கழுத்து நிறைந்த நீலநிறமாகவே விளங்கியது. அல்லற்பட்டு ஆற்றாது அடைக்கலம் புகும் ஆருயிர்களின் அல்லலைப் போக்கி அருள்புரியும் அருள் வள்ளல் ஈசன் என்பதை ஆலந்தோய்ந்த நீலகண்டம் அறிவிக்கின்றது. நீலமணி மிடற்று ஒருவனென ஔவையார் ஈசனைப் போற்றுகின்றார். நஞ்சை அமுதாக உண்டவன் என்பதால், தம்மைப் புகலாக வந்தடைந்த ஆருயிர்களின் வினை நுகர்ச்சியைக் கெடுத்துப் பேரின்பம் அருள்பவன் என்னும் உண்மையும் குறிப்பாகத் தோன்றுகின்றது. இன்பமே உருவாகிய இறைவன், தம்மையே புகலாக வந்தடைந்த ஆருயிர்களின் அல்லலைப் போக்குவதால் தானும் ஓர் இன்பம் அடைகின்றான் எனக் கூறி நயத்தக்க சிறப்பும் "விடத்தை இன்னமுது உண்ணிய ஈசன்" என்னும் தொடரில் அமைந்துள்ளது.

**"தந்தது உன்தன்னைக் கொண்டது என்தன்னைச்**
**சங்கரா ஆர்கொலோ சதுரர்**
**அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்**
**யாது நீபெற்றது என்பால்"**

என்பது திருவாசகம். இறைவன் ஆருயிர்களின் வினை நுகர்ச்சியைக் கெடுத்தும் தான் அவ் வினையால் தாக்குண்ணாது நிற்கும் பேராற்றல் உடையவன். "வினையில் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்".

**"விண்ணோர் அமுதுண்டுஞ் சாவ ஒருவரும்**
**உண்ணாத நஞ்சுண்டு இருந்தருள் செய்குவாய்"**

என்பது சிலப்பதிகாரம்.

இங்ஙனம் கற்குடி மலையில் எழுந்தருளியிருக்கும் ஈசனின் பெருங்கருணையை வியந்து பாடிப் போற்றிய சம்பந்தர் கற்குடி மலைச் சாரலை நோக்கினார். அங்கு, ஆலத்தை உண்டு அமரர்க்கு ஆரமுதை அருளிய ஈசனின் அருட்செயலிலும் உயர்ந்ததோர் செயலைக் கண்டார். கண்டதும் களிபேருவகை கொண்டார்.

கற்குடி மலைச் சாரலிலே களிறும் பிடியுமாக யானைகள் களித்து வாழ்ந்தன. ஒரு களிற்று யானையின் பக்கத்திலே பிடியொன்று நின்றது. களிறு மிகவும் மதங்கொண்டது. ஆனால் அந்த மதக் களிறு தன் காதற் பிடியாகிய பெண்யானைக்காகவே வாழ்கின்றது. தன் காதற் பிடியின் இன்பமே தன் இன்பமாகக் கொண்டுவிட்டது. தன் தன்மை கெட்டுக் காதற் பிடியின் தன்மையாகவே மாறிவிட்டது. மலைச் சாரலிலே மூங்கில் முளைகள் காணப்பட்டன. களிறு அந்த மூங்கில் முளைகளைத் தனது கையால் வாரி வாரிப் பிடித்து ஊட்டுகின்றது. பிடி உண்பதைக் கண்டு உயிர் தளிர்க்கின்றது. மீண்டும் மீண்டும் வாரிவாரி ஊட்டுகின்றது. தான் உண்ண வேயில்லை; தன்னை மறந்துவிட்டது. தான் அதுவாந் தரத்தை அடைந்துவிட்டது.

ஆலத்தை அமுதாக உண்டு அமரரைக் காத்த ஈசன் எழுந்தருளியிருக்கும் கற்குடி மலையில் வாழும் களிறு, இன்னருளால் ஈசனையே வென்றுவிட்டது என்பதை உணர்ந்தார்; வியந்தார்.

**“மருங்கு அளி யார்பிடி வாயில்**
**வாழ்வெதி ரின்முளை வாரிக்**
**கருங்களி யானை கொடுக்கும்**
**கற்குடி மாமலை யாரே”**

எனப் பாடிப்போற்றினார்.

**மருங்கு அளியார் பிடி:**

களிற்றின் பக்கத்திலே நிற்கின்ற பிடியை நோக்கினார். அந்தப் பிடி களிற்றின்மேல் வைத்த அன்பே உருவமாக நிற்கின்றது. பிடி களிற்றையே எங்கும் காண்கின்றது. அதற்குப் பார்த்த இடமெல்லாம் நீக்கமறத் தன் அன்புத் தலைவனாகிய களிறே காணப்படுகின்றது. அன்பு நிறைந்த பிடியின் அல்லலைப் போக்கி ஆதரித்தல் ஒன்றையே தன் கடனாகக் கொண்ட களிறு கருணையே உருவமாகக் காட்சியளிக்கின்றது. பிடியின் அயரா அன்பைக் கண்ட சம்பந்தர் **“அளி ஆர் பிடி”** என்று பாராட்டுகின்றார். களிறு எங்கு சென்றாலும் அகலாமல் அதனையே புகலாகக் கொண்டு அதன் மருங்கிலேயே நிற்கின்ற பிடியைச் சம்பந்தரால் மறக்கவே முடியவில்லை. அன்பினால் அல்லவா பிடி, களிற்றின் அருளைப் பெறுகின்றது என எண்ணுகின்றார். அன்பு அருளைப் பெற்றுவிட்டது. **“அன்பு ஈன் குழவி அருள்”** என்பது திருக்குறள்.

**கருங்களி யானை:**

களிறு மதம் மிக்கது. ஆணவம் கொண்டது. அதன் மதச் செருக்கெல்லாம் பிடியின் அன்பினால் அடங்கிவிட்டது. பிடியின் அன்புப் பிடியிலே களிறு தன் ஆணவத்தன்மை அற்றுவிட்டது. அருளால் நிறைந்த களிறாக மாறிவிட்டது. அன்பினாற் பண்பட்டு அருளால் நிறைந்த களிறாக மாறிவிட்டது. அன்பினால் பண்பட்டு அருளால் நிறைந்த கருங்களி யானையாகிய களிறு, நல்ல மூங்கில் முளைகளை வாரி வாரிப் பிடியின் வாய்க்குள் வைத்து ஊட்டுகின்றது. தன் பசித் துயரை மறந்தேவிட்டது. தான் என்பது அற்றுவிட்டது. கற்குடி மலையில் எழுந்தருளி இருக்கும் கருணைக்கடலாகிய ஈசனிலும் களிற்றின் கருணை கூடிவிட்டது. களிறு தன் துன்பத்தை மறந்து; தன் அன்புப் பிடியின் துன்பத்தைப் போக்குதலையே பெரிதாக மதித்தது. களிறு ஒரு மூங்கில் முளையையேனும் உண்ணவில்லை. கற்குடி மலையில் எழுந்தருளிய ஈசன், நஞ்சையேனும் உண்டார். கற்குடிமலைக் களிறு தன் அன்புப் பிடியின் பசியைப் போக்குதலே தன் பசியைப் போக்குதலாகக் கருதிவிட்டது.

பிடிவாயில் கொடுக்கும்:

பிடியின் வாயில் மூங்கில் முளைகளை வாரி வாரி வைத்தவண்ணமாகவே களிறு நிற்கின்றது. கொடுத்தலே அன்றிக் கொள்ளுதல் இல்லை. ஈசனும் அன்பினாற் தம்மை அடைந்த ஆருயிர்களுக்கு, இன்பத்தை அளித்தலேயன்றி அவ்வுயிர்களிடம் தான் இன்பத்தை அடைதல் இல்லை. நஞ்சையுண்டு அமரர்க்கு அமுதை அளித்த கற்குடி மலைக் கடவுளின் கருணைச் செயலிலும் பார்க்க தானுண்ணாமல் மூங்கில் முளையை வாரி வாரிப் பிடிக்கே ஊட்டிய கற்குடி மலைக் களிற்றின் செயல் விஞ்சிவிட்டது. எனவே கருங்களியானை, மருங்கு அளியார் பிடிவாயில் வாள்வெதிரின் முளையை வாரிக் கொடுக்கின்ற கற்குடி மாமலையில் ஈசன் எழுந்தருளி இருப்பதானால்தான் பெருமை அடைகின்றான். தான் நஞ்சையுண்டு அமரர்க்கு அமுதளித்த செயலினும் விஞ்சிய அருட்செயலை உடைய களிறு வாழ்கின்ற கற்குடி மலையில் எழுந்தருளயிருப்பதைக் குறித்து ஈசனும் உவகை எய்துகின்றான்.

**ஒருங்களி நீயிறை வாஎன்று**
**உம்பர்கள் ஓலமிடக் கண்டு**
**இருங்களம் ஆரவிடத்தை**
**இன்னமுது உண்ணிய ஈசர்**
**மருங்கு அளி யார்பிடி வாயில்**
**வாழ்வெதி ரின்முளை வாரிக்**
**கருங்களி யானை கொடுக்கும்**
**கற்குடி மாமலை யாரே**

**(ஒருங்கு- எங்கள் எல்லோரையும். அளி - காத்தருள்க. உம்பர்கள் - தேவர்கள். இருங்களம் - பெரிய கழுத்து. விடம் - நஞ்சு. உண்ணிய - உண்ட. மருங்கு - பக்கத்தில். அளி - அன்பு. வாள் - வளர்கின்ற . வெதிர் - மூங்கில். கரும் - கரிய. களியானை - மதம் பொருந்திய களிறு.)**

இத்திருப்பாட்டில் ஈசனின் இன்னருளைக் களிறும் பிடியும் கலந்த அன்பு வாழ்வில் வைத்து அருள் வள்ளலாகிய சம்பந்தர் எமக்கு உணர்த்துகின்றார். ஓருயிர் தன் இன்பத்தை இன்னொரு உயிருக்காக ஈந்து, தான் இன்பமே எந்நாளும் துன்பமில்லை என்ற நிலையில் வாழ்கின்ற பொழுதுதான் அருளைக் காண்கின்றது. மிக்க மதங்கொண்ட களிறு, மூங்கில் முளையைக் கண்டவுடன் தானுண்ணவில்லை. தன் மருங்கில் நின்ற தனது அன்புப் பிடியின் வாய்க்குள் மூங்கில் முளையை வாரி வைத்து ஊட்டியது. மதங் கொண்ட மால்யானை, மூங்கில் முளையை வாரித் தான் உண்ணாமல், அன்பார் பிடியுண்ண அள்ளி ஊட்டிய அருட்செயலைக் கண்ட திருஞானசம்பந்தர் சிந்தை மகிழ்ந்தார். நஞ்சைத் தாமுண்டு, அமரர்க்கு அமுதம் அளித்தருளிய ஈசனின் செயலைக் களிற்றின் செயல் நினைவூட்டியது. உடனே கருங்களிமால் யானையையும் கற்குடி மாமலையாரையும் ஒருங்குவைத்துப் பாடிவந்தார்.

ஈசனின் இன்னருளை, அ∴றிணை உயிர்களாகிய களிறும் பிடியுங் கொண்டு காத்த வாழ்வு அணிசெய்கின்றது. அன்பு அகன்று அருளாக மலர்ந்து பேரின்பப் பெருவாழ்வை வழங்கிவிடும் என்பதை இதனால் தெளிகின்றோம். களிறு தன்னை முற்றாகப் பிடியின் அன்புக்கே ஒப்படைத்துத் தான் அதுவாக நின்ற தன்மைபோல் ஆருயிர்களும் தம்மை முற்றாக இறைவனிடமே ஒப்படைத்துத் தம் தன்மை கெட்டு, இறைவனின் தன்மையாக மாறி, அவன் அடி நிழற்கீழ் பேராவியற்கையை பேரின்பம் நுகர்ந்து வாழ்தல் வேண்டும் என்பதே இதனாற் போந்த குறிப்பாகும்

# சங்க நாதம்

## கந்தபுராணச் சிந்தனைகள்

### கலாநிதி சங்கரப்பிள்ளை சிவலோகநாதன்

ஆலயங்களிலே சங்கு ஊதுவது சத்துரு நாசத்தை வேண்டி, அதற்கான உற்சாகத்தை வேண்டி என்பார்கள். வாழ்க்கையிலே நாங்கள் எல்லோரும் பலவிதமான போர்களை, போர்க்களங்களைச் சந்திக்கின்றோம். அந்த நேரங்களிலே, சுற்றியிருக்கும் அன்புடையவர்கள் பலவிதமாக உற்சாகப்படுத்துவார்கள்.

ஒருவர் நோய்வாய்ப்பட்டிருக்கின்றார். அவரைச் சென்று பார்த்துவருவது நம்முடைய வழக்கு. அவர் நோயோடு நடாத்திக்கொண்டிருக்கும் போரிலே மனம் தளர்ந்துவிடாமல் இருக்கவே நாம் அவ்வாறு செய்கிறோம். பையன் பரீட்சைக்குக் கடுமையாகப் படிக்கின்றான். அவனுக்காக நாம் படித்துக் கொடுக்க முடியாது. ஆனால் அவனை ஊக்கப்படுத்தவேண்டும். எனவே எதிர்பாராத வகையிலே ஒரு நல்ல உணவு, ஒரு நல்ல பானம் என்று பலவற்றைக் கொடுக்கிறோம். ஒரு குறிப்பிட்ட பகுதியை முடித்துவிட்டால் பாராட்டுக்கள், பரிசுகள் என்பன கொடுக்கிறோம். சுருங்கச் சொன்னால், ஒருவர் போரில் ஈடுபடுகின்றார். சுற்றி நிற்கின்ற நாம் சங்க நாதம் செய்கிறோம். இந்தச் சங்க நாதம் கந்தபுராணம் காட்டும் சைவக் கலாசாரத்தின் ஒரு சிறப்பான அம்சமாகும்.
சூரனுக்கும் முருகப்பெருமானுக்கும் கடும் போர் நடைபெறுகிறது. சூரன் மிகவும் உக்கிரமாக முருகப் பெருமானைத் தாக்குகிறான். முருகப்பெருமான் தோற்றுவிடுவாரோ என்கின்ற அளவுக்கு யுத்தம் நடைபெறுகிறது. முருகப்பெருமானின் தேரில் இருந்த கொடியை அறுத்துவிட்டு அம்பு மழையால் முருகப்பெருமானை மூடிவிடுகிறான் சூரன். அந்த நிலையிலே, சூரன் விட்ட அம்பு மழையைத் தன் அம்புகளால் அழித்து, அவனுடைய கொடியையும் அறுத்துக் கடலில் வீசுகிறார் முருகப்பெருமான். சங்கநாதம் செய்து உற்சாகப்படுத்தவேண்டிய சந்தர்ப்பம். உற்சாகம் ஊட்டினால் இன்னும் திறமையாகப் போர் புரிந்துவிடக்கூடும். ஆயிரம் தலைகளையுடைய பானுகம்பன் என்கின்ற பூதத் தலைவன் இதைக் காண்கின்றான். தன்னுடைய ஆயிரம் வாய்களிலும் ஆயிரம் சங்குகளை வைத்து ஊதுகிறான். அவனுடைய சங்கு ஓசையைக் கேட்டதும் முருகப்பெருமானுடைய வெற்றியை உணர்ந்த திருமால் தன்னுடைய பாஞ்சசந்நியம் என்ற சங்கை எடுத்து ஊதுகிறார்.

**பாய்பெரும் புகழ்ப் பானுகம் பன்வளை**
**ஆயி ரங்களும் ஆர்த்திட அண்டர்தம்**
**நாயகன் தம்விறல் கண்டு நாரணன்**
**தூய சங்கு முழங்கிற்றுத் துண்ணென**

சூரபன்மன் வதைப்படலம் 204

சூரனுடைய புத்திரர்கள், அமைச்சர்கள், கடைசியாக மூத்த மகன் பானுகோபன் என எல்லோரும் இறந்துவிட்டார்கள். தம்பி சிங்கமுகாசுரனை அழைத்து வரும்படி, தூதர்களை அனுப்புகிறான் சூரன். அவர்கள் சொன்ன செய்தியைக் கேட்டதும் சிங்கமுகாசுரன் தன் படைகளுடன் புறப்படு கிறான். அவனை ஊக்கப்படுத்தவேண்டும். படைகள் புறப்பட்டவுடன் சல்லிகைகள், முரசுகள், காகளங்கள், உருண்ட சங்குகள், உடுக்கைகள், துந்துபிகள் எல்லாம் ஒலிக்கின்றன.

முரட்டிடு சல்லிகை முரசங் காகளம்
உருட்டுறு கரிமுகம் உடுக்கை துந்துபி
திரட்டுறு தண்ணுமை திமிலை யாதிகள்
இரட்டிய கேதனம் எங்கும் ஈண்டிற்றே

சிங்கமுகாசுரன் வதைப்படலம் 10

சூரனுடைய மக்களிலே வலிமை மிகுந்த அக்கினிமுகாசுரனை வீரவாகுதேவர் கொன்றுவிடுகிறார். அசுரர் படைகள் பயந்து போய்விட்டன. சூரன் கலங்கிப்போனான். அந்த நேரத்திலே அவனுக்கு உசார் கொடுத்துத் தம்மை யுத்தத்துக்கு அனுப்புமாறு அவனுடைய மூவாயிரம் புத்திரர்களும் கேட்கிறார்கள். அவன் அவர்களை அனுப்ப, அவர்கள் யுத்தத்துக்குப் புறப்படுகிறார்கள். உற்சாகம் ஊட்டவேண்டிய சந்தர்ப்பம். சங்குகள் இடி இடித்தாற்போல முழங்கின. தண்ணுமைகளும் கொம்புகளும் ஒலித்தன. வெண்படாகங்கள், பெருமையுடைய பேரிகைகள் என்பன ஒலித்தன.

சங்கங்கள் முழங்கின தண்ணு மைகோ
டெங்கெங் குமியம் பினவெண் பகடத்
துங்கங் கெழுபே ரிதுவைத் தனவால்
அங்கங் குருமுற் றனவா மெனவே

மூவாயிரர் வதைப்படலம் 17

இவ்வாறே இரணியன், தருமகோபன், என எல்லோருடைய யுத்தப் புறப்பாட்டின்போதும் சங்கநாதம் நடைபெற்றது. சங்கநாதம் கந்தபுராணம் காட்டும் சைவத் தமிழ்க் கலாசாரத்தின் ஒரு சிறப்பு அம்சமாக வருகிறது. நாமும் கல்விப்போர், பொருள் தேடும் போர், விரும்பிய பெண்ணை அல்லது ஆணை அடையும் போர், பதவி அந்தஸ்து தேடும் போர் என்று பலவாறான போர்களில் முயல்வோருடன் கூடி வாழ்கிறோம். நாமும் கந்தபுராணம் காட்டும் வழியில் சங்கநாதம் செய்து அவர்களை ஊக்குவிப்போமாக.

## விளக்கு ஏற்றுவது ஏன்

"தினமும் விளக்கேற்று" என்று பெரியவர்கள் பாடாய்ப் படுத்துகிறார்களே! இந்த நவீன காலத்தில் ஒரு சுவிட்சைப் போட்டால் அலங்கார விளக்குகள் சுவாமி படங்களைச் சுற்றி எரிகிறதே! இது போதாதா? எனக் கேட்பவர்கள் உண்டு.

விளக்கேற்றுவதன் ஆன்மிகக் காரணம் என்ன?

- விளக்கேற்றத் திரி என்னும் கயிறு வேண்டும். கயிற்றைப் பாசம் என்று சொல்வர். பாசக் கயிற்றால் மனிதன் கட்டப்பட்டிருக்கிறான். அவனுக்கு (அ) அவளுக்கு, மனைவி, கணவன், குழந்தை, பணம் என்று பலவற்றில் பாசம்.
- விளக்கு எரிய எண்ணெய் விடுகிறார்கள். எண்ணெய்யை வடமொழியில் 'ஸ்நேகம்' என்பர். ஸ்நேகம் என்றால் உறவு அல்லது நட்பு. எண்ணெயை விளக்கில் ஊற்றும் போது பிசுக்காகப் பற்றிக்கொள்ளும் இது வாழ்க்கைமீது மனிதன் கொண்டுள்ள பற்றை விளக்குகிறது.
- விளக்கில் 'ஜோதி' என்னும் நெருப்பு ஏற்படுகிறது. இது திரியையும் எண்ணெயையும் கரைத்துவிடுகிறது. கடைசியில் அதுவும் அணைந்து போகிறது.

அதாவது மனிதன் பந்தபாசத்தையும் பற்றையும் அறுத்தால் ஞானமாகிய ஜோதியில் (கடவுள்) ஐக்கியமாகிவிடலாம் என்பதே தத்துவம்.

**- ஜெயலட்சுமி கோபாலன் சென்னை, நன்றி பெண்மணி அக்டோபர் 2017**

# கற்பக விநாயகரும் வலஞ்சுழி விநாயகரும்

சாவகச்சேரியூர் Dr கதிர்காமநாதன்

கற்பக விருட்சம் கேட்டதை எல்லாம் கொடுக்கும். இதேபோன்று, விரும்பியதை, வேண்டுவதை, ஆசைப்படுவதை யாவும் கொடுப்பவர்தான் கற்பகவிநாயகர். பாரதியார், கற்பகவிநாயகக் கடவுளே போற்றி என்று தொடங்கும் பாடலைப் பாடினார்.

**அற்புதக் கீர்த்தி வேண்டின் ஆனந்த வாழ்க்கை வேண்டின்**
**நற்பொருள் குவிதல் வேண்டின் நலமெலாம் பெருக வேண்டின்**
**கற்பக மூர்த்தி தெய்வக் களஞ்சியத்து இருக்கை சென்று**
**பொற்பதம் பணிந்து பாரீர் பொய்யிலை, கண்ட உண்மை**
**பிள்ளையார்ப் பட்டி யென்னும் பேரருட் சுரங்கத் தின்கண்**
**உள்ளவன் மலையிற் பூத்த உருவத்தின் இயற்கைத் தோன்றல்**
**தெள்ளிய மனிதர்க் கெல்லாம் திருவருள் வழங்கும் தெய்வம்**
**கள்ளமில் பத்தர் தந்தை கற்பக மூர்த்தி யன்றோ**

- கவிஞர் கண்ணதாசன்

கற்பக விநாயகருக்குத் தேசிவிநாயகர் என்றொரு பெயருண்டு. தேசி என்றால் ஒளி, அழகு உள்ள ஒப்பற்ற தலைவன் என்று பொருள். 1300 ஆண்டுகளுக்கு முன் மலையின் அடிவாரத்தைக் குடைந்து பிள்ளையாரை உருவாக்கினர். இதனால் இக் கோயில் ஒரு குடைவரைக் கோயிலாகும்.



ஆறடி உயரத்தில், வடக்குத் திசையைப் பார்த்தபடி அர்த்தபத்மாசன உருவமாக அருள் பாலிக்கிறார். இவருக்கு இரு கைகள். வலது கையிலே சிவலிங்கம் இருக்கிறது. இடது கையை இடையில் வைத்திருந்து அருள்பாலிக்கின்றார். துதிக்கை வலப்புறமாகச் சுழித்து வலஞ்சுழி விநாயகராக உள்ளார். வலப்புறத் தந்தம் நீண்டும் இடப்புறத் தந்தம் குறுகியும் உள்ளன. அங்குசம், பாசக்கயிறு என்பவை இல்லை.

கயமுகாசுரனைக் கொன்ற பழி நீங்கச் சிவபிரானை விநாயகப்பெருமான் பூசித்ததாக ஒரு வரலாற்றை இந்தக் கோயில் கூறுகின்றது.

இக்கோயிலுக்கு எருக்காட்டூர், மருதங்குடி, கணேசபுரம், பிள்ளைநகர் என்ற பெயர்களும் உண்டு. மேலும் இங்கு மருந்தீஸ்வரர், அம்பிகை போன்ற பல தெய்வங்களைக்கொண்டு ஏழு நிலைக் கோபுரத்தோடு கோயில் அமைந்துள்ளது. எனினும் கற்பகவிநாயகர் மிகப் பிரசித்தி பெற்றவர். 2018 செப்டெம்பர் மாதம் ஏழாம் நாள் வெள்ளிக்கிழமை காலை பத்து மணியளவில் கோயிலை அடைந்தோம். அன்று நாலாம் நாள் திருவிழா ஆகும். முதலில் நாம் கண்டது அறுகம்புல் விற்கும் பெண்மணிகளைத்தான். முழம் பத்து ரூபாவுக்கு, மூன்று முழம் அறுகம்புல் வாங்கினோம். "தமிழ் அர்ச்சனை செய்யப்படும்" என்று பெரிய எழுத்தில் இருந்த அறிவிப்பையே முதலில் கண்டேன். மனம் உவகையில் பூரித்தது. நேராக விநாயகர் சந்நிதிக்குச் சென்றோம். சிறு கூட்டந்தான் இருந்தது. பூமாலைகளால் அலங்கரிக்கப்பட்டு, பெரிய உருவில் எம்மையே பார்ப்பதுபோல விநாயகர் தோன்றினார். முன்பு நாங்கள் பார்த்ததைவிட அழகாக, அருள் புரிபவராகக் காட்சியளித்தார். நாங்கள் வாங்கிய அறுகம்புல் மாலையை அங்கிருந்த சிவா சாரியரிடம் கொடுத்தோம். அவர் அதை அன்போடும் பக்தியோடும் ஏற்று மெதுவாக விநாயகர்மீது அணிவித்தார். ஒரு சிறு மாலையையே இவ்வளவு கரிசனையுடன் சிவாசாரியார் அணிவிக்கின்றாரா என்று ஆச்சரியப்பட்டேன். இன்னொரு சிறிய சிவாசாரியார் தீபாரதனை செய்து விபூதியும் கொடுத்தார். இவற்றைவிட, விநாயகரைப்பற்றிய சிறப்புக்களை எமக்குச் சொல்லிவிட்டு, வசந்தமண்டப பூசை பார்க்கும்படி பவ்வியமாகக் கூறினார்.

"திருநாள் மண்டபம்" என்று வசந்த மண்டபத்துக்குப் பெயரிடப்பட்டிருக்கிறது. விசாலமாக, அழகாக, கற்களாலான சிற்பங்கள் அலங்கரிக்க அமைந்துள்ள மண்டபம். இதற்குப் பிரகாரமும் உண்டு. அங்கே மக்கள் குழுமியிருந்தனர். நாமும் சென்று அவர்களுடன் இருந்தோம்.

சுமார் பத்தரை (10.30) மணியளவில் பூசை ஆரம்பித்தது. தூப, தீப ஆராதனை உபசாரம் மிகவும் ஆசறுதியாக நடைபெற்றது. மந்திர கோஷமும் மிக இனிமையாக, கேட்பதற்கு அமைதி தருவதாக இருந்தது. அங்கிருந்த ஒரு சிவாசாரியார்கூட ஏட்டையோ புத்தகத்தையோ பார்த்து மந்திரம் ஓதவில்லை. அவ்வளவும் அவர்களுக்கு மனப்பாடம்போலும். பூசை நிறைவானதும் ஓதுவார் ஒருவர் பஞ்சபுராணம் ஓதினார்.

உற்சவ மூர்த்தியைச் சிவாசாரியர்களே தோளிற் சுமந்துவந்தனர். வாசலில் நின்றிருந்த வெள்ளிக் கேடகத்தில் (சுவாமியை வைத்து எடுத்துச் செல்லும் பீடம்)) வைத்தனர். பின்னர் உள்வீதி வலம் நடைபெற்றது. பின்னர் சுவாமி கோயில் வாசலுக்கு வந்தது. இங்கு நாம் முன்னர் எங்கும், ஒருபோதும் காணாத அதியசம் நிகழ்ந்தது. வண்ண உடையணிவித்து அலங்கரிக்கப்பட்ட இரண்டு எருதுகளை வாசலிற் கண்டோம். அங்கு ஒரு வண்டியும் நின்றது. கோயிலிலில் இருந்து புறப்பட்டுவந்த உற்சவமூர்த்தியை அந்த வண்டியிலே இருத்தினார்கள். பின்னர் இந்த அலங்காரம் செய்த இரு எருதுகளையும் வண்டியிலே பூட்டினார்கள். சாரதி வண்டியில் அமர்ந்தார். சிவா சாரியர்கள் முன்செல்ல, பின்னால் நாதஸ்வர மேள கானம் இசைப்பவர்கள் செல்ல, அதற்குப்பின்னால் தேவாரம் இசைப்பவர்கள் செல்ல வெளிவீதியுலா நடைபெற்றது. முன்புறம் சில அன்பர் முள் மிதியடியுடன் நடந்து சென்றனர். நாங்கள் ஒருபடி மேலே போய் முள் மிதியடியுடன் தீக்குளிப்பும் செய்தோம். ஆமாம், பாதணி இல்லாத நம் பாதத்தைச் சிறு கற்கள் பாதிக்க, வெயில் கடுமையாகச் சுட, சுடும் வெயிலில் ஓடி ஓடிச் சென்று மர நிழல்களிலே ஒதுங்கி ஒதுங்கி வீதியைச் சுற்றிவந்தோம். வழியில் குளிர்பானமும் கிடைத்தது. வீதி வலம் வந்து இறைவர் மீண்டும் வசந்தமண்டபத்தை அடைந்தார்.

இங்கும் ஒரு புதிய அநுபவம் கிடைத்தது. இறைவனுக்கு முன்னால் மூன்று சிவாசாரியர்கள் வேதகோஷம் எழுப்பினர். பின்னர் வசந்தமண்டபத்தைச் சுற்றிய உள்வீதிவலம் நடைபெற்றது.

இடையிடை சுவாமியை நிறுத்தி வேதகோஷம் ஓதப்பட்டது. ஆரம்பித்த இடத்துக்கு உற்சவர் வந்து சேர்ந்தவுடன் ஆறு சிவாசாரியர்கள் ஒருமித்து வேதம் ஓதினர்.

இரண்டாவது சுற்றில் மூன்று ஓதுவார்கள் பண்ணிசை ஓதினர். மிருதங்கம், ஆர்மோனியம் ஆகிய வாத்தியங்களுடன் இவர்கள் பண்களை ஓதியபோது மிகவும் மனத்தை உருக்கியது. நமக்குத் தெரிந்த பல தேவரங்களைப் பாடியது கேட்க மகிழ்ச்சியாக இருந்தது. முதன்முறை போலவே இவர்களும் உற்சவரை நிறுத்தி நிறுத்தி தேவாரம் ஓதியபடி சுற்றி வந்தனர்.

மூன்றாவது சுற்று நாதஸ்வர மேள இசையுடன் வந்தது. நாதஸ்வர வித்துவான்கள் சுலோகம் போல வாசிக்க, அதற்கு ஏற்ப தவில் வித்துவான்கள் வாசிக்க, மூன்றாவது சுற்றும் முதலிரண்டு சுற்றுப்போலவே மெதுவாக வந்தது. நாங்கள் எங்குமே காணாத காட்சி இது. இதன் பின்னர் இறைவர் தம் இருப்பிடம் அடைந்தார். எமக்குப் பிரசாதமும், அளவில்லாத ஆனந்தமும் கிடைத்தது.

பிள்ளையார்பட்டி கோயிலில் தமிழக அரசு அறநிலையத்துறை தொடர்பு இருந்தாலும் நகரத்தார் என்று குறிப்பிடப்படும் செட்டியார்கள்தான் மிகச் சிறப்பாக நிருவகிக்கிறார்கள். மிகவும் சுத்தமாக இருப்பதுடன் வழிபாடுகள், அர்ச்சனைகள் எல்லாம் மிகச் சிறப்பாகவே நடைபெறுகின்றன. இது ஒரு குறிப்பிடத்தக்க, பாராட்டப்படவேண்டிய விடயம். இந்தக் ஆலயத்தின் உண்டியலில் சேரும் பணத்தை அரசு எடுத்துவிடுகிறது. பின் கோயிற் செலவுக்குத் தேவையென்றால் அவ்வப்போது கொடுப்பதாகத் தெரிகிறது.


கோயிலில் உள்ள ஒவ்வொரு சந்நியிலும் அத்தெய்வத்தின் பெயரை அழகாக எழுதிவைத்திருப்பது மெச்சத்தக்கது. பிள்ளையார் பிரபலமாகிவிட்டதால் இக்கோயில் பிள்ளையார் கோயிலாகிவிட்டது. ஆனால் இங்கே மருந்தீஸ்வரர், வாடாமலர் மங்கை என்ற பெயர்களில் சிவனும் உமையும் இருந்து அருள்பாலிக்கின்றனர்.

காரைக்குடி - திருப்பத்தூர் சாலையில் பிள்ளையார்பட்டி இருக்கிறது. இந்த இரு இடங்களிலுமிருந்து அரசுப் பேருந்துகள் மூலம் ஆலயத்தை அடையலாம்.

## திருவலஞ்சுழி வெள்ளைப் பிள்ளையார் திருவிழா

புண்ணிய நதிகளில் ஒன்றான காவிரி நதி வலமாகச் சுழித்து செல்வதால் இவ்விடத்துக்கு வலஞ்சுழி என்று பெயராகும். 2018ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் ஆறாம் திகதி வியாழக்கிழமை, பிள்ளையார்பட்டி விநாயகரைத் தரிசிப்பதற்கு முதனாள் வெள்ளைப் பிள்ளையாரைத் தரிசிக்கச் சென்றோம். முன்பு ஒருமுறை போனபோது கோயில் பூட்டியிருந்ததால் தரிசனம் கிடைக்கவில்லை. அதனால், இம்முறை போனோம்.

நாம் போன அன்று திருவிழா நடக்கிறது என்று எங்களுக்குத் தெரியாது. ஆனால், பிள்ளையார் தன் திருவிழாக் காட்சியை எமக்குக் காட்டவெனத் திருவுளம் கொண்டார் போலும். அன்று மூன்றாம் திருவிழா. நாம் சென்ற சமயம் வசந்தமண்டபத்தில் பூசை நடந்துகொண்டிருந்தது. இங்குள்ள பிள்ளையாருக்கு இரு சக்திகள். தமிழ் நாட்டில் வேறு இடத்தில் காணமுடியாத காட்சி. ஒரு சக்தி கமலாம்பிகை. இவர் மகாவிஷ்ணுவின் கண்ணிலிருந்து தோன்றியவர். மற்றவர் வாணி. பிரம்மாவின் நாக்கிலிருந்து தோன்றியவர். இவர்களை வடநாட்டில் சித்தி, புத்தி எனக்



குறிப்பர். பூசை நடத்திய சிவாசாரியார் தம்முடன் இருந்த வயதிலே குறைந்த மூன்று சிவாசாரியார்களை வேதம் ஓதும்படி கேட்டார். அவர்களும் மூன்று வேதங்களை ஓதினார்கள். நிறைவாக ஓதுவார் ஒருவர் பஞ்சபுராணம் ஓதினார். எமது லூயிஷாம் சிவன்கோயில் ஓதுவாரைத் தான் அறிவேன் என்று கூறினார்.

உள்வீதி வலம்வரும்பொழுது, விநாயகரை இரு சக்திகளுடன் நாலு சக்கரங்கள் உடைய பெட்டிபோன்ற ஒரு ஊர்தியில் அமர்த்தினர். திருவுருவத்தை ஒருபுறமாகச் சரித்து வைத்தனர். நன்கு தரிசிக்க முடிந்தது. இருவர் வண்டியை இழுக்க, உள்வீதி வலம் மிகத் துரிதமாக நிறைவுற்றது. வாசலில் வந்து நின்றதும் இதேபோன்ற இன்னொரு ஊர்தியில் சண்டேசுரரை வைத்து கொண்டுவந்தனர். பின் இரு ஊர்திகளையும் வெளிவீதியில் இழுத்துச் சென்றனர். வீதியில் ஆங்காங்கே நிறைகுடம் வைத்து வரவேற்பதைப் பார்த்தோம்; தரிசித்தோம்.

பின், கோயில் உள்ளே சென்று வெள்ளை விநாயகரைத் தரிசித்தோம். திருவுருவம் சிறியது. ஓரடி உயரங்கூட இருக்காது. வெள்ளை விபூதி நிறத்தில் வலஞ்சுழி விநாயகராக இருந்து அருள்பாலிக்கிறார். ஒருமுறை பார்த்தாலே பசுமரத்தாணிபோல் மனத்தில் பதியும் வடிவம். இவருக்குச் சக்திகள் கிடையாது. உற்சவ மூர்த்திக்குத்தான் இரு சக்திகள். ஓர் இளைய சிவாசாரியார்தான் அருகில் இருந்தார். இந்த விநாயகருக்கு அபிஷேகம் நடப்பதில்லை என்று கூறினார். பச்சைக் கர்ப்பூரந்தான் மேலே தூவுவார்கள். அவ்விடத்தில் என் மனைவியையும் என்னையும் விட வேறு யாரும் இல்லை. அதனால் அவருடன் பேச முடிந்தது.

வெள்ளை விநாயகரின் தோற்றத்துக்கு இரு வகையான கதைகள் உண்டு. புராணத்தின்படி, பாற்கடலைக் கடையுமுன்னர் இந்திரன் கடல் மணலில் விநாயகர் திருவுருவை அமைத்தான். பாற்கடலைக் கடைந்து முடிந்தபின் கரையில் வைத்த பிள்ளையாரை எடுக்க முயன்றபோது அதை அசைக்க இயலவில்லை. கடல் மணலால் உருவாக்கப்பட்டதால் அவர் வெள்ளையாக உள்ளார். வடமொழியில் "சுவேத" விநாயகர் என்றும் தமிழில் வெள்ளை விநாயகர் என்றும் இவரைக் குறிப்பிடுகின்றனர்.

**கடல் நுரையினால் இந்திரன் உருவாக்கிய விநாயகர் என்று மக்கள் பொதுவாக நம்புகின்றனர்.**

வலஞ்சுழி நாதராகிய சிவன்மீது அப்பரும் சம்பந்தரும் தேவாரங்கள் பாடியுள்ளனர். இந்தத் தலம் பாடல்பெற்ற தலமாக இருந்தும் விநாயகரே இங்கு பிரபலமாக உள்ளார்.

**என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து**
**முன்னம் நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்**
**மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்**
**பன்னி ஆதரித்து ஏத்தியும பாடியும் வழிபடும் அதனாலே**

*திரு 2 பதி 106 பா 1*

**அலையார் புனற்கங்கை நங்கை காண**
**அம்பலத்தில் அருநட்ட மாடி வேடந்**
**தொலையாத வென்றியார் நின்றி யூரும்**
**நெடுங்களமும் மேவி விடையை மேல்கொண்**
**டிலையார் படைகையி லேந்தி யெங்கும்**
**இமையவரும் உமையவரும் இறைஞ்சி ஏத்த**
**மலையார் திரளருவிப் பொன்னி சூழ்ந்த**
**வலஞ்சுழியே புக்கிடமா மருவி னாரே**

*திரு 6 பதி 72 பா 1*

இதில் முதலாவது தேவாரம், "என்ன புண்ணியம்", திருஞானசம்பந்தர் பாடிய மூன்று பதிகங்களுள் ஒன்றின் முதலாவது தேவாரம். மேலேயுள்ள இரண்டாவது தேவாரம் **அப்பர் சுவாமிகள் பாடியது. ஒரேயொரு பதிகம்தான். அதிலும் இந்த ஒரேயொரு தேவாரந்தான் கிடைத்துள்ளது.**

தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்திலிருந்து சுவாமிமலை போகும் வழியில் 1கிமீ தொலைவில் அதே தெருவில் வலஞ்சுழி விநாயகர் கோயில் உண்டு. இவரைத் தரிசித்து அருளைப் பெறுங்கள்.

**சில குறிப்புக்கள்:**

**அறுகம்புல்:**

"அறுகுபோல் வேரூன்றி" என்று சொல்வார்கள். அறுகு ஓரிடத்தில் முளைத்து ஆறு இடங்களில் வேரூன்றிப் படர்ந்து வளரும். இதன் தாவரவியல் பெயர் Cynoden. இதே பெயரில் இதில் ஓர் இரசாயனப் பொருள் இருப்பதாகச் சொல்கிறார்கள். இந்தப் புல்லின் சாறு பல நோய்களுக்கு நிவாரணி. நாய், பூனை, ஆடு, மாடு என்பவை அறுகம்புல்லை உண்டு தமது நோய்களைக் குணப்படுத்துவன.

ஆவணிச் சதுர்த்தி பிள்ளையாருக்கு மிக விசேடமான நாளாகும். பிள்ளையார்பட்டி கோயிலிலும் இந்த நாளைத் தீர்த்தோற்சவ நாளாக வைத்து அதற்கு முந்திய ஒன்பது நாளும் திருவிழா நடைபெறும். ஒன்பதாம் நாள் தேருற்சவம். மீதி நாள்களில் பகலில் பீடத்திலும் இரவில் வெவ்வேறு வாகனங்களிலும் விநாயகர் வீதிவலம்வந்து அருள்புரிவார்.

பிள்ளையார்பட்டி கோயிலில் சிவன் சந்நிதியிலிருந்து வரும்போது வெளியே வலதுபுறத் தூணில் மீனாட்சி கல்யாணம், கண்ணப்பர், மார்க்கண்டேயர் ஆகியோரின் வரலாறுகள் என்பன சித்திரமாகச் செதுக்கப்பட்டுள்ளன.

ஈழநாட்டிலும் சில பிள்ளையார் கோயில்களில் ஆவணி சதுர்த்தியை ஒட்டி உற்சவங்கள் நடைபெறும்.

# இங்குனைப் போற்றச்சொல் ஏது? - சொக்கன்

நவராத்திரிச் சிறப்புக் கவிதை

எழுதும் எழுத்தெலாம் எம்தேவி தந்தாய்,
பழுதற்(று) எழுதிப் பழுக! - தொழுதுனைப்
போற்றிப் புலையன் புலவனாய் வேடமிட்டேன்,
ஏற்று, மதிச்சுடரை ஏற்று!

நூலெடுத்து வாசித்தால் நுட்பமெலாம் கைவருமே,
காலெடுக்கும் திக்கெலாம் கைதட்டல் - கோலெடுத்துத்
தேவிநீ ஆட்டுவிக்கத் தெள்ளறிவு வந்திடுமே,
ஓவியத்தில் கண்திறப்ப(து) ஒத்து!

வீணை இசைமீட்டும் வித்தைக்கு அச்சாணி,
சாணை முழும்செய் சரஸ்வதியே - தூணை
நிகர்த்தவுடல் தான்வளர்த்து நிற்கின்றேன் வீணே,
நகத்தளவு ஞானம் நவில்

கலைமகள் கண்பார்க்கக் கல்லும் சிலையாம்,
அலைசூழ்ந்த நல்லுலகின் ஆணி - நிலையான
செல்வமாம் கல்வியைச் செம்மையாய்ப் பெற்றிடப்
பல்வளமும் பின்வரும் பார்

கரம்எனது, ஆனால் கலைவாணி நீயே
விரல்பிடித்துச் செய்கின்றாய் வித்தை - உரம்மனத்தில்
ஊறிடல் உன்றன் உயர்கருணை யாலன்றோ!
பேறிது! மெத்தப் பெரிது!

அகரம் தொடங்கி அனைத்தும் உனதே,
சிகரம் தொடத்துணை செல்வி! - மகரம்போல்
அங்கண் திறந்தென்னை ஆளாக்கிச் செய்தவளே,
இங்குனைப் போற்றச்சொல் ஏது?

இருட்டினில் நான்கிடந்து இன்னலுற்றேன், தேவி!
அருளிடு புத்தி அகத்தில் - மருட்சியும்
அவ்விளக்கால் ஓடி அகல, கலைவாணி
செவ்வாயால் கொஞ்சம் சிரி!

புத்தகம் வாசித்தேன், புத்தியில் சேர்த்ததுவோ
வித்தகி உன்றன் விரலசைவு - முத்தனைய
புன்சிரிப்பால் எங்கள் புவியாளும் வாணியே,
உன்பாதம் சேர்ந்தோர்க்(கு) உயர்வு

கரையிலாக் கல்விக் கடலைக் கடக்கச்
சுரைக்கூடு போதுமா? சொல்நீ! - அரைகுறையாய்க்
கேணிநீர் என்றெண்ணக் கெட்டிடுவாய், தானழித்து
வாணியாம் தோணியில் வா!

பணம்,புகழ் மற்றப் பலவளமும் வெற்று
நிணம்தான், உயிர்க்கவை நேரா? - மணக்கின்ற
வெண்மலர்த் தேவியவள் விண்டளிக்கும் ஞானமாம்
பண்பினை ஏற்கப் பணி!

# அணுவில் நின்றாடுகிறான் அகிலத்தின் நாயகன்!

-வை.சிவனருட்செல்வர்

அணுவில் நின்றாடுகின்றான் தாண்டவக்கோனே - அவன்
அகிலத்தின் நாயகன்தான் தாண்டவக்கோனே (அணுவில் நின்றாடு..)
ஏகனை நீ அடைவதற்கு தாண்டவக்கோனே - சில
ஏற்ற வழி சொல்கிறேன்கேள் தாண்டவக்கோனே
ஆணவத்தை அகற்றிவிடு தாண்டவக்கோனே - அது
அகங்காரம் ஓட்டிவிடும் தாண்டவக்கோனே
சினத்தை என்றும் கொள்ளாதே தாண்டவக்கோனே - அது
சீரழிக்கும் உனையேதான் தாண்டவக்கோனே
பிறன் மனையை நாடாதே தாண்டவக்கோனே - அது
பெரும் பழிதான் சேர்த்துவிடும் தாண்டவக்கோனே (அணுவில் நின்றாடு..)
ஆசையினை வளர்க்காதே தாண்டவக்கோனே - அது
அழிவிற்கே வித்திடும்கேள் தாண்டவக்கோனே
உலகத்தை அணாப்பாதே தாண்டவக்கோனே - அது
ஒழித்துவிடும் வம்சத்தையே தாண்டவக்கோனே
இன்பமுடன் ஈகை செய்தால் தாண்டவக்கோனே - தானாய்
இறையன்பைச் சேர்ந்துவிடும் தாண்டவக்கோனே
மாதாபிதா குருதெய்வம் தாண்டவக்கோனே - நீ
மறவாமல் தொழுதிடுவாய் தாண்டவக்கோனே (அணுவில் நின்றாடு..)
ஐந்தெழுத்து மந்திரத்தைத் தாண்டவக்கோனே
ஆழ்மனத்தில் பதித்துவிடு தாண்டவக்கோனே
பற்றுகளைப் பாற்றிவிட்டால் தாண்டவக்கோனே
பற்றிலன்தாள் சேர்ந்திடலாம் தாண்டவக்கோனே
எல்லாமே அவன்செயல்தான் தாண்டவக்கோனே - அதை
எவரும்மாற் றல்லரிது தாண்டவக்கோனே
எளிதாய் நான் சொல்லிவிட்டேன் தாண்டவக்கோனே - அதை
ஏற்று நடந்திடுவாய் தாண்டவக்கோனே (அணுவில் நின்றாடு..)

# உடம்புக்கு ஏற்ற உணவு

## லண்டன் அம்பி

எமது ஊனுடம்பு ஒரு கலத்திலிருந்து பலவாகி, உடம்பாகப் பரிணமித்துப் பேருடலாகி வளருவதற்கு வழி வகுப்பது உணவே. தாவரமாயினும் மாமிசமாயினும், பூமியிலிருந்து பெறப்படுபவையே இந்த உணவு வகைகள். மனித சக்தி, பருமன், அதனால் ஏற்படும் செயற்பாடுகள் (வளர்ச்சிகள்) அனைத்துக்கும் ஆதாரம் உணவே. உயிரினங்களின் படைப்பும் அதோடு கூடிய வளர்ச்சியும் அவ்வுயிர்களின் உடலமைப்பைச் சார்ந்தே அமைந்துள்ளன. இதனைச் சற்றே விரிவாகக் கவனிப்போம்.

எமது உணவு உட்கொள்ளப்பட்டு நன்கு சமிபாடு செய்யப்படுதலால், உரிய வளர்ச்சி, சக்தி வெளிப்பாடு, செயற்பாடு ஆதியன ஒழுங்காக நடைபெறும். ஆனால் இப்பூமியில் ஒவ்வோர் உயிரினத்துக்கும் வெவ்வேறான உடலமைப்பும் அதற்கேற்ப அவற்றின் செயற்பாடுகளும் மாறுபட்டனவாயுள்ளன. மனித உடல் அதனது தேவைகளுக்கேற்ப உகந்தவாறு இயற்கையாற் படைக்கப்பட்டுள்ளது. அதுபற்றி அவதானிப்போம்.

இந்த அதிஉயர் விஞ்ஞான உலகத்தில் எந்த விதமாகவும் எவராலும் ஆக்கமுடியாதவாறு உன்னதமான முறையில் மனித உடலும் அதன் செயற்பாடுகளும் விந்தனை மிக்கதாக அமைந்துள்ளன. அதனால், நாம் உண்ணும் உணவுப் பதார்த்தங்களும் அதற்கேற்கவே உகந்ததாக அமைதல் அவசியமாகின்றது. அது தவறின் உடல் வளர்ச்சி, செயற்பாடு ஆகியவை பிறழ்வடைவது தவிர்க்க முடியாததாகின்றது. உதாரணமாக, 'பெற்றோல்' எரிபொருளில் இயங்கும் ஒரு வண்டிக்கு 'டீசல்' எரிபொருளாக இட்டு உபயோகித்தால் என்னவாகும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி அல்லவா?


சிலவகையான உணவுப் பதார்த்தங்கள் சோம்பலை அதிகரித்து, தூக்கத்தைக் கிளப்பக் கூடியனவாயும் வேறு சில இன்பத்தையும் ஊட்டுவனவாயும் இருத்தல் கண்கூடு. ஒருசில உணவுகள் உண்டவுடன் அயர்வையும் சற்றுப் பின்னர் உற்சாகத்தையும் ஏற்படுத்தும். இவ்வாறான வித்தியாசங்கள் ஏன் ஏற்படுகின்றன? சற்றே ஆராய்வோம்.

எமது உடலால் சமைத்த உணவை அப்படியே ஜீரணிக்க இயலாது. அதற்கு நொதியங்கள் தேவை. தேவைப்படும் நொதியங்கள் அனைத்துமே நம் உடம்பில் உற்பத்தி ஆவதில்லை. சில, நாம் உண்ணும் உணவிலேயே கொணரப்படுபவை. சமைத்தல் இந்த நொதி யங்களின் பெரும் பகுதியினை (80%-90%) அழித்துவிடும். எனவே இக் குறைபாட்டினை ஈடுசெய்ய எமது உடல் பெருமுயற்சி செய்யும். முழுமையாக இதைச் செய்ய இயலாவிட்டாலும் பாதியையாவது எமது உடம்பு சரிபார்த்துவிடும் திறமை உடையது. இவ்வாறாக இயற்கை உணவிலுள்ள பெருவாரியான நொதியங்கள் வீணடைந்துவிடும். நாம் உண்ணும் உணவில் இப்பகுதி வீண் என்றே கொள்ள வேண்டியுள்ளது.


எனவே, சிறிதளவு சக்தியை ஆக்குவதற்குப் பெருமளவு உணவை உண்ணவேண்டியிருத்தல் உடம்புக்கு இன்னொரு பாரமல்லவா? அவசியமான நொதியங்களுள்ள உணவை உட்கொண்டால் எமது உடலின் சமிபாட்டுத் திறன் அதிகரிக்கும் என்பது கண்கூடு. இயற்கை உணவை அவற்றின் புத்துணர்வுடன் உட்கொண்டால் இயங்கும் நிலையிலுள்ள உடற்கலன்கள் அவற்றிலிருந்து பெருமளவு சக்தியையும் ஆரோக்கியத்தையும் பெற்றுக் கொள்ளும்.

உணவு விடயத்தில் எமது உடலே (அன்றி நாவல்ல) சிறந்த ஆசான் - வைத்தியரோ, வேதியரோ, யோகியரோ தேவையில்லை.

சமிபாட்டு விடயத்தில் உயிரினங்கள் தாவரபட்சனி, மாமிசபட்சனி என இரு வகையானவை என அறிவோம். சில உயிர் இனங்கள் இரு வகைக்குள்ளும் அடங்கும். இவ்விரு இனங்களுக்கும் அடிப்படையில் வெவ்வேறான உடலமைப்புக்கள் உள்ளன. உணவு உட்செல்லும் வாயிலிருந்து கழிவுப் பொருள்கள் வெளியேறும் வாயில்வரை அடிப்படை வித்தியாசங்கள் பல உள.




மாமிசபட்சணிகளின் தாடைகளில் முக்கியமாக வெட்டுந்தொழிலுக்குரிய பற்களே காணப்படும்.




தாவர பட்சணிகளின் தாடைகளிலோ வெட்டுவதற்கும் அரைப்பதற்கும் தேவையான பற்கள் காணப்படும். மனித உடம்பில் அதாவது எமக்கு வெட்டுவதற்கும் அரைப்பதற்குமுரிய பற்களே முக்கியமாக உள்ளன.

எமது உணவுவகைகளை எடுத்துக்கொண்டால் இந்த வித்தியாசத்தின் அடிப்படை புரியும். சமைக்காத அரிசியைச் சில நிமிடங்கள் வாயில் வைத்திருக்குங்கால் இனிப்புச்சுவை தோன்றுவதை உணரலாம். இதன் காரணம் என்ன? வாயிலே (நொதியங்களால்) மாச்சத்து உணவு சீனியாக மாறுவதுதான்.

உமிழ்நீரிலுள்ள டயலின் (Ptyalin) என்னும் நொதியம் தாவரபட்சினிகளில் மட்டுமே உண்டு. மாமிசபட்சினிகளிற் கிடையாது. எனவே மாமிச பட்சினிகள் உணவை வெட்டி உடனேயே நேராக உட்கொள்ளல் அவசியம். நாமோ அவற்றை மென்று நொதியங்களால் ஓரளவு சமிபாடு செய்தபின்னரே உமிழ்நீருடன் உள்ளே செலுத்துதல் வேண்டும்.

மெல்லுதல் ஒழுங்காகச் செய்யின் சமிபாட்டில் ஏறக்குறைய பாதியளவு மெல்லுதனாலேயே நிறைவெய்திவிடும். (தாவரபட்சினிகளான) எமது தாடைகளின் தனித்துவம் இதுவே. உணவு வயிற்றை அடையும்போது சமிபாட்டின் பாதியளவு ஏற்கெனவே நிறைவுபெற்றிருக்கும். அதாவது ஏற்கெனவே பாதி சமித்த உணவே வயிற்றை வந்தடையும். இதனால் சமிபாடும் திறமையாக நடைபெறும். துரதிஷ்டவசமாக, இன்று பலரும் அளவுக்கு மீறிச் சமைக்கப்பட்ட உணவை உண்பதாலும் அசரம் அவசரமாக (மெல்லாமல்) உண்பதாலும் எமது வயிறு உரியளவு சமிக்கப்படாத, அதுவும் ஓரளவு அழிவு செய்யப்பட்ட உணவையே பெறுகின்றது. இதனால் வயிற்றுக்கு மேலும் சுமைகள் அழுத்தப்படும். இன்னொரு விதத்தில் கூறின், பெரும்பாலும் இன்றைய சமையலறைகள் திறமையாக உணவைச் சீரழிக்கும் வேலையிலேதான் ஈடுபடுத்தப்படுகின்றன. அல்லவா?

அடுத்து, உணவு சமிபாட்டுக்கான கால்வாயை எடுத்துக்கொண்டால் கூட்டுமொத்தமாக தாவர உணவு மட்டும் உண்ணும் உயிரினங்களுக்கு (மாமிச உணவு உண்பவற்றைவிட) கணிசமான அளவு நீளமானதாயுள்ளதைக் காணலாம். சுருங்கக் கூறின், உட்கொள்ளும் உணவைப் பொறுத்தே சமிபாட்டுக்கான உறுப்புக்களும் அமைந்துள்ளன. மனித உணவுக்குழாயில் பச்சை (சமைக்காத) மாமிசம் செல்வதற்கு 70-

72 மணி நேரமும் சமைத்த மாமிசத்துக்கு 50-52 மணி நேரமும் எடுக்கிறது. சமைத்த மரக்கறி வகைகள் 24-30 மணி நேரமும் சமைக்காத காய்கறி 12-15 மணி நேரமும் பழ வகைகள் 1.5 - 3 மணி நேரமும் எடுக்கின்றன.

சமைக்காத மாமிசத்தை வெளியே வைத்தால் 70-72 மணி நேரத்தில் அழுகி நாற்றம் எடுக்கும். வெயிற் காலங்களில் (சூடு அதிகமான பொழுதில் அழுகும் நேரம் இன்னும் குறுகும். நமது வயிற்றின் சூழலும் சூடான சுவாத்தியத்தை ஒத்ததே. எனவே மாமிசம் உடலுட் தங்கியிருப்பதன் விளைவு? துர்நாற்றந்தான். எதனால் இது ஏற்படுகிறது? அதிக அளவு பக்ரீறியாக்களின் செயற்பாட்டினால் அல்லவா? இந்த நுண் கிருமிகள் செயற்படாவிடின் மனித உடல் பல்வேறு உபாதைகளுக்கு உள்ளாகும். நோய் வாய்ப்பட்ட உற்ற நண்பர் ஒருவருக்கு 'மட்டன்' பிரியாணியையா கொடுப்போம்? நல்ல பழவகைகளைக் கொடுப்பதுதானே வழக்கம்; பொருத்தமானது.

பல மாமிசம் மட்டும் உண்ணும் பிராணிகள் தினமும் எம்மைப்போல மூன்று வேளை உண்பதில்லை. மாறாக, உதாரணத்துக்கு, புலி ஆறிலிருந்து எட்டு நாள்களுக்கு ஒரு தடவை தான் உண்ணுமாம். பெரிய அளவு உணவை (இறைச்சியை) உட்கொண்டு சோர்ந்துவிடும்/ உறங்கும் மலைப்பாம்பு தன்னைவிடப் பருமனான உயிரினத்தை விழுங்கிவிட்டு அயர்ந்துவிடும். ஒருவர் அடிக்கடி தூங்கினால், என்ன 'இரையுண்ட மலைப்பாம்பு போலத் தூங்குகிறாயே' எனக் கூறுவதைக் கேட்டிருக்கிறோம் அல்லவா?

சுறுசுறுப்பாக விழிப்புடன் உலாவித்திரியும் மிருக இனங்கள் பல (முயல், குரங்கு, யானை போன்றவை) தாவர உணவு மட்டும் உண்பவை என்பதை அறிவோம். எனவேதான் நாமும் தாவரபட்சினிகள் என்பதாலேயே அடிக்கடி உணவு உண்டு உரிய ஆறுதல் பெற்று வாழ்கின்றோம். தொன்மை மிக்க தாவர உணவின் தரத்தினைத் தூய மனத்துடன் மதித்து மகிழ்வுமிகு வாழ்வினை வளம்பெறச் செய்வோம்

இன்னொரு குறிப்பு என்னவெனில் மூன்று விகிதமே புரதம் கொண்டுள்ள எமது உடம்புக்கு உட்கொள்ளத் தேவையானது சிறிதளவே. அதிகப் புரதம் உண்ணுதல் புற்றுநோய்க்கு வழிகோலும்.

எமது வயிறு சில உணவுப்பதார்த்தங்களைச் செரிக்கும்போது காரத் திரவத்தையும் மற்றும் சிலவற்றிற்கு அமிலத் திரவத்தையும் சுரக்கும் தன்மையது. உரிய, உகந்த உணவுப் பதார்த்தங்களை கண்டபடி உட்கொள்ளலால் வயிறு பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கும். ஆகவே நாம் உட்கொள்ளும் உணவானது உகந்தவாறு கலந்திருத்தல் அவசியம். எனவேதான் எமது பாரம்பரியத்தில் சில உணவு வகைகளைச் சிலவற்றுடன் மட்டுமே சேர்த்து உண்ணவேண்டும் என்று நியதியை ஏற்படுத்தினர். அது அன்றைய சமையற் கலை. ஆகவே, என்ன உணவு உண்பது என்பது மட்டுமன்றி எப்படி, எவ்வளவு, எவ்வகையான உணவுகளுடன் உண்ணவேண்டும் என்பவற்றை எல்லாம் கவனித்தல் அவசியம்.

இவ்வழமைகளைத் தவறவிட்டு மேற்கத்திய முறைகளைக் கண்மூடித்தனமாக உணர்வின்றி உள்ளடக்கிய இன்றைய ஆகார வழக்கத்தினாலேதான் இன்று பல்வேறு புதிய உடற் செயற்பாட்டுக் குறைபாடுகளும் வியாதிகளும் மனித இனத்திடையே குடிகொண்டுள்ளன.

இறுதியாக, சமையல் செய்து பரிமாறும்போது எந்த எந்த உணவு வகைகள் ஒரு நேரத்தில் உட்கொள்ள உகந்தவை என அறிந்து சமைத்துப் பரிமாறவேண்டும். உதாரணமாக, ஆகாரம் உட்கொள்ளும்போது, முதலில் பருப்புடன் நெய் சேர்த்தல் - இதைப் பலரும் மறந்தேவிட்டனர்.

எமது பாரம்பரிய உணவு வகைகளின் உயர்ந்த உயிர்ச்சத்து முதலானவற்றை அறிந்து உணர்ந்து ஆரோக்கியத்துடன் வாழ்வோமாக.

உ
சிவமயம்



# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

## அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரர் ஆலயம்

# நூதன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேக அழைப்பிதழ்

## Saiva Munnetta Sangam (UK) Sri Nadarajar Temple

# CONSECRATION CEREMONY INVITATION

செல்வ நெடுமாடஞ் சென்று சேண் ஓங்கிச்
செல்வ மதிதோயச் செல்வம் உயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே.
- சம்பந்தர் திருமுறை

கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின். - திருக்குறள்

தோற்றம் துடி அதனில் தோயும் திதி அமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாய்
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம் முத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு - திருவதிகை மனவாசகம்
கடந்தார் உண்மை விளக்கம்

அன்புடைய அடியார்களுக்கு வணக்கம்.

இறைவனருளால் 41 ஆண்டுகளாக வளர்ந்து வரும் சங்கப் பணிகளை மேலும் வலுவடையச் செய்யவென சிவனருளால் அமைந்த **நடராஜர் ஆலயம்** கடந்த 10 ஆண்டுகளாக மக்களுக்கு வளமான வாழ்வமையவும், பக்தி நெறியை வளர்க்கவும் துணையாகத் திகழ்கின்றது. உங்களனைவரதும் அறமான சிந்தனையால் புதிய சந்நிதிகளுடன் இவ்வாலத்தின் கட்டட வேலைகள் நிறைவடையவுள்ளன.

இவ்வாலயத்தின் **அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேத சிதம்பரேஸ்வரப் பெருமானுக்குப் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மகா கும்பாபிஷேகம்** நிகழும் சுபமங்களகரமான விளம்பி ஆண்டு ஐப்பசித் திங்கள் 29-ஆம் நாள் புதன்கிழமை சப்தமி திதி, திருவோணம் நட்சத்திரம், சித்தயோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் **(14-11-2018) புதன்கிழமை** காலை 9.36 மணிக்குமேல் காலை 10.12 மணிக்குள் அமைந்துள்ள விருச்சிக ஸ்திர லக்ன சுபமுகூர்த்த வேளையில் **தேவதாபிரதிஷ்டை மகா கும்பாபிஷேகம்** நடைபெற எல்லாம் வல்ல சிவபெருமானின் திருவருள் வாய்த்துள்ளது.

அன்பர்கள் யாவரும் வந்து கலந்து சிறப்பித்து வணங்கி மகிழ்ந்து பேரானந்தப் பெருவாழ்வு பெற வேண்டுமென அன்புடன் அழைக்கின்றோம்.

இப்படிக்கு
**ஆட்சிக்குழு, ஆலய சிவாசாரியார், தொண்டர்கள்**

சர்வ சாதக சிவாசாரியார்கள் :

Dr. விகாச இரத்னா **சிவஸ்ரீ பிச்சை சிவாசாரியார்,** பிள்ளையார்பட்டி, தமிழ்நாடு

கயிலை சிவஸ்ரீ **நாகநாதசிவம் சிவாசாரியார்,**
இலண்டன் ஸ்ரீ முருகன் கோவில்

**ஸ்ரீ இரத்னதாண்டவ தீக்ஷிதர்,** சிதம்பரம், தமிழ்நாடு

சிவாகம ரத்தினம், சிவஸ்ரீ **சிவராம சிவாசாரியார் (ரமேஷ் குருக்கள்)**

இவர்களுடன் இலண்டன் ஆலயங்களிலிருந்து சிவாசாரியார்கள் கலந்து சிறப்பிப்பார்கள்.



ஆலய சிற்ப நிர்மாணம் :
சிற்பக்கலை மாமணி, விஸ்வப்பிரம்மஸ்ரீ, சிற்பரதக்கலைத்திலகம்
**சரவணமுத்து ஜெயகாந்தன்**


Banana Leaf
taste with tradition
அனைத்து விழாக்களுக்கும் உணவு,
பலகார வகைகளும் செய்து கொடுக்கப்படும்.
Tel: 020 8554 4120
Mob: 07969 972 202
Web: www.bananaleafuk.com
Email: info@bananaleafuk.com
4 Central Parade, Ley Street, Ilford , Essex IG2 7DE
We do cater for :
Wedding
Puberty Ceremony
Birthday &
Arangetram Etc.


Veena's
CASH & CARRY
Quality! Variety!! Satisfaction!!!
Veena's
at
BARKINGSIDE
020 8550 2700 • www.veenas.com



சிவயோகம்
SIVAYOGAM



# இந்துக் கலாசார மையம்

128, Aurelia Road, Croydon CRO 3BF
Tel: 020 8767 9881, Fax: 020 8711 5333
Email: sivashakthy@sivayogam.co.uk



**குறைடனில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் மூலஸ்தானம்**

அம்பாள் அடியார்கள் அனைவருக்கும் வணக்கம். உங்கள் அனைவருக்கும் அம்பாளின் அருள் கிடைக்க எல்லாம் வல்ல அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மனை ப் பிரார்த்திக்கின்றோ ம். அம்பாளின் அருளாலும், அடியவர்களின் நன்கொடைகளாலும் அம்பாளுக்குத் திருக்கோயில் அமைக்கும் திருப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. மேலும் திருப்பணியை விரைவாக நிறைவேற்றுவதற்கு தங்களுடைய ஒத்துழைப்பை நல்குமாறு மிகவும் தாழ்மையாகக் கேட்டுக்கொள்கின்றோம். தங்கள் நன்கொடையை ஆலயத்தில் நேரடியாக பணமாகவோ அல்லது காசோலையாகவோ அல்லது வங்கியூடாகவோ வழங்கலாம். வங்கிக் கணக்கு விபரம்

Name :- SIVAYOGAM BUILDING FUND

Account No. :- 20057541

Sort Code :- 20.21 78

Bank :- BARCLAYS BANK

நன்றி

அறங்காவலர் சபையினர்


Lycamobile
4G LTE
Get our best deal
for International calls
EU
All In One Plus 15
£15
/30 days
5GB
Unlimited
International minutes*
Unlimited
UK minutes & texts
Activation code:
*139*544#
National Plus
EU
3GB
Unlimited
UK minutes & texts
£10
/30 days
100
International minutes*
Activation code:
*139*1544#
*Countries included:
EU Australia Canada China Hong Kong Iceland India
Malaysia New Zealand Norway Singapore South Korea Switzerland Thailand USA
lycamobile.co.uk
0207 132 0322
Top-up your SIM online or where you see the following signs
ASDA TESCO Sainsbury's WHSmith McColl's

# Satash Community Care



உடற்குறைபாடு அல்லது மனநலக் குறைவு காரணமாக உங்களுக்கோ அல்லது உறவினருக்கோ உதவி தேவைப்படின் பல ஆண்டுகள் அநுபவமும் அங்கீகாரமும் பெற்ற எங்கள் சேவையை நாடுங்கள். அவரவர் தேவைகளுக்கேற்பப் பராமரிப்பைத் திட்டமிட்டு வகுத்துச் செயற்படுத்துவதில் எமது நிறுவனம் பாராட்டும் பரிசும் பெற்றது.

மேலதிக விவரம் அறிய எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள்.

**Orchid Bungalow**
51 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Adult Services 01708 850555

**Jasmine Bungalow**
53 Mollands Lane,
South Ockendon RM15 6DH
Children Services 01708 851189

109-111 Molands Lane,
South Ockenden RM15 6DJ
Adult Services 01708 856592


**Trinity Community Centre**
East Avenue, London E12 6SG
Domicilary Care 0203 200 1047

www.satashcommunitycare.com

Letchmi Loganathan
07957 869620
letchmi@satashcommunitycare.com

Logan Loganathan
07956 377298
logan@satashcommunitycare.com

Sathian Loganathan
07949 755104
sathian@satashcommunitycare.com


GOSHIN ISSHIN-RYU KARATE ASSOCIATION
LONDON - UK
SENSEI M. RAMATHAS
TRAINED BY MICHAEL CALANDRA
THE FIRST AUTHORISED INSTRUCTOR IN THE UNITED KINGDOM OF
ISSHINRYU WORLD KARATE ASSOCIATION
OKINAWA - JAPAN
Other Branches: Gants Hill, Ilford Lane, East Ham, Catford, Chadwell Heath, Sutton, Ley Street
Contact: Incharge & Instructor, Sensei M Ramathas Tel: 07958 010 139
Michael Calandra
NEW YORK - USA
M Ramathas
4th Dan
LONDON - UK



"Ammanai Saran Addinthal Athika Varam Peralam"
SRI KANAGA THURKKAI AMMAN (HINDU) TEMPLE TRUST
Founded on 10.08.1991 Charity No. 1014409
5 Chapel Road London W13 9AE,
Tel: 020 8810 0835/ 020 8840 0485
www.ammanealing.org Email: info@ammanealing.org

# தியான மண்டபம்



## அம்பிகைக்கு ஓர் மண்டபம் அமைத்திடுவோம் வாரீர் !

**6000 சதுர அடியில் மூன்று தளங்களைக் கொண்டு அமையும் தியான மண்டபம் ஒவ்வொருவரும் இணைந்திட ஒரு சதுர அடிக்கு £180 பவுண்களே. அம்பிகையின் அருட்கடாட்சத்திற்கு ஆளாகுங்கள்.**

கடந்த 14.07.2018 அன்று அழகுற அமையப் போகும் தியான மண்டபத்துக்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. கட்டட வேலைகள் துரிதமாக நடைபெற துர்கை அடியார்கள் அனைவரும் தங்களால் முடிந்த நன்கொடையை வழங்கி உதவுங்கள்!

சிறுதுளி பெரு வெள்ளம்

**Please Extend your support to build our Meditation Hall your Magnanimity will enable us to build the Three Story 6000 Squate Feet Meditation Hall. Sponsorship of £180 for a Square feet.**

Bank Details: SKTA Temple Trust
LLOYDS Bank, Sort Code: 30-98-91| Account No: 02717646

**அன்னையின் பணியில் இணைந்திடுங்கள் அவள் அருளைப் பெற்றிடுங்கள்!**

*Please Donate as much as you can!*

உ

சைவ முன்னேற்றச் சங்கம்

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிதம்பரேஸ்வரர் சந்நிதி

# விசேட தினங்கள்

நவம்பர் (06-11-2018) தொடக்கம் டிசம்பர் (23-12-2018) வரை

| | | |
|---|---|---|
| *06.11.2018* | செவ்வாய் | தீபாவளி |
| *07.11.2018* | புதன் | கேதாரகௌரி விரதம் பூர்த்தி |
| *08.11.2018* | வியாழன் | கந்தஷஷ்டி விரதாரம்பம் |
| *13.11.2018* | செவ்வாய் | கந்தஷஷ்டி சூரசங்காரம் |
| *14.11.2018* | புதன் | ஆலய மஹாகும்பாபிஷேகம் |
| *22.11.2018* | வியாழன் | திருக்கார்த்திகை விரதம் |
| *23.11.2018* | வெள்ளி | விநாயகர் விரதாரம்பம் |
| *29.11.2018* | வியாழன் | ஆறுமுக நாவலர் குருபூசை |
| *13-12-2018* | வியாழன் | விநாயகர் விரதப் பூர்த்தி |
| *14.12.2018* | வெள்ளி | திருவெம்பாவை ஆரம்பம் |
| *23.12.2018* | ஞாயிறு | நடேசர் அபிஷேகம் |

ஸ்ரீ சிவகாமசுந்தரி உடனுறை ஸ்ரீ சிதம்பரேசுவரர் ஆலயத் திருப்பணி நிறைவுற்று நவம்பர் மாதம் கும்பாபிஷேகம் நடைபெறும்.

அன்பர்கள் அனைவரும் வந்து, வழிபட்டுத், திருவருள் பெற்று உய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அடுத்த கலசம் இதழில் ஆலய வழிபாட்டு நேரங்கள் போன்ற விவரங்கள் அறிவிக்கப்படும்.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# Saiva Munnetta Sangam (UK)

*"Community Service Through Saiva (Hindu) Concern"*

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel : 020 8514 4732 Fax: 01268 561805
**www.saivamunnettasangam.com smsukinfo@gmail.com**

**Registered Charity No: 292085**

## MEMBERSHIP FORM

| | | | | |
|---|---|---|---|---|
| Title | | Home Phone | | |
| First Name | | Mobile No | | |
| Surname | | Email ID | | |
| Address | | Membership | ☐ Annual £15.00 | ☐ Life £150.00 |
| Town | | For online payments to Saiva Munnetta Sangam (UK)<br>Lloyds Bank A/c Number : 00373079<br>Sort Code : 30-90-80 | | |
| Post code | | | | |

I wish to become a member of the Saiva Munnetta Sangam (UK) and enclose herewith cash/ cheque / made online payment for £ ......................... Members are entitled to receive our information emails, Thoranam and Kalasam quarterly magazine.

| | |
|---|---|
| Date | Signature of the Applicant |

| | |
|---|---|
| giftaid it | *Use Gift Aid and you can make your donation worth more. For every pound you give to us, we get an extra 0.25 pence from Inland Revenue, helping your donation go further with no extra cost to you. This means that £15.00 donation can be turned into £18.75 and £150.00 donation can be turned into £187.50 just so long as donations are made through Gift Aid.* |
| | *By ticking (√) the box under the headed 'Gift Aid', I confirm that I am a UK Income or Capital Gains taxpayer. I have read this statement and want Saiva Munnetta Sangam UK to reclaim tax on the donation, given on the date shown. I understand that I must pay an amount of Income Tax and/or Capital Gains Tax in the tax year at least equal to the amount of tax that all the charities and CASCs I donate to, will reclaim on my gifts for that tax year. I understand that other taxes such as VAT and Council Tax do not qualify. I understand the charity will reclaim 25p of tax on every £1 that I have given.* |

## For Official Use

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Receipt No | | Pay in slip No | | Date Banked | |
| Membership No | | Membership Starts | | Membership Ends | |
| Approved Executive Committee | | | Introduced by | | |
| President | | Hon. General Secretary | | Membership Secretary | |

# ஞானமும் கல்வியும்

## திருமதி கமலா பாலசுப்பிரமணியம்

பகவத்கீதையில் ஞானி என்பவன் யார்? என்று அருச்சுனன், பகவான் கிருஷ்ணனிடம் கேட்கிறான். அதற்கு பகவான், "யார் எல்லா ஆசைகளையும் துறந்தும், மேலும் ஆசைகளுக்காக ஏங்காமலும் இருக்கின்றானோ அவனே ஞானி" என்று கூறுகிறார். அவனால் மட்டுமே எல்லைகளற்ற ஆனந்தத்தை அனுபவிக்க முடியும். ஒரு உண்மையான ஞானி தன்னை முழுதும் ஞானத்திற்காகவே ஈடுபடுத்திக் கொள்கின்றான். சமூகம், குடும்பம் முதலிய கட்டுப்பாடுகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டவனாகிறான். அவனிடம் மேலோங்கி இருப்பது தியாக மனப் பான்மையே. பல ஞானிகளும் மகான்களும் இதனாலேயே மரணம் இல்லாப் பெரு நிலையை அடைந்திருக்கிறார்கள்.

ஞான மார்க்கம் என்பது எளிதானது அன்று. ஏனெனில், ஒருவன் நினைத்த மாத்திரத்தில் தன்னை ஞான விசாரத்தில் ஈடுபடுத்த முடியாது.. சுபாவத்திலேயே அவன் ஞான விசாரத்தில் ஈடுபாடுடையவனாக இருத்தல் வேண்டும். ஞான விசாரத்திற்குத் தகுதி உடையவனாக இருக்க வேண்டுமென்றால் அவன் தன்னை விருப்பு, வெறுப்புகளிலிருந்து விடுவித்துக்கொளளல் வேண்டும். உலக ஆசை களைத் துறந்து ஞான மார்க்கத்தை அடை வதையே குறிக்கோளாகக் கொண்டு தன் வாழ்வை அமைத்துக் கொள்ளல் வேண்டும். இவ்வழியை ஞான மார்க்கத்துடன் கூடிய துறவற வாழ்க்கை நெறி எனலாம்.

அடுத்த வழி கர்மயோகிகளுக்காக சொல்லப்பட்டுள்ளது. இல் வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள ஒருவன், அடுத்தடுத்து சங்கிலித் தொடர்போல கர்மங்களை(செயல்களை)ச் செய்ய வேண்டியுள்ளது. மனிதன் தான் விரும்பியபடி கர்மங்களைச் செய்யும் சாமர்த்தியம் உள்ளவனாக இருக்கின்றான். ஒரு கருமத்தைச் செய்யவோ, செய்யாமல் இருக்கவோ அல்லது வேறு விதமாகச் செய்யவோ சுதந்திரம் உடையவனாக இருக்கின்றான். எதைச் செய்யலாம், எதைச் செய்யக்கூடாது என்பதை வேதங்களில் விஹித கர்மா அல்லது கடமை என்று கட்டளையாகச் சொல்லப்பட்டு இருக்கின்றது. கடமை என்பது பொதுவாகக் குறித்த நேரத்தில் ஒருவனால் செய்யப்பட வேண்டிய கர்மங்களைத் தவறாமல் செய்தல் ஆகும். விஹித கர்மா அல்லது கடமை என்பதன் நோக்கம் உலகப்படைப்பின் நியதிக்குத் தகுந்தாற்போல் தன்னை அதில் இணைத்துக் கொண்டு வாழ்வை அமைத்துக் கொள்ளுதல் ஆகும். தொடக்கத்தில் தன் கடமையைச் சரிவரச்செய்து வாழ வேண்டும் என்ற நிலையில் உள்ள மனிதன் நாளடைவில் தன் கடமைகளை இயல்பாகவே செய்ய முற்படுகின்றான். தன் செயலைக் கடமை மனப்பாங்குடன் இயல்பாகவே செய்யும்போது அது கர்மயோகம் ஆகிறது. இங்கே தனி மனித விருப்பு வெறுப்புகளுக்கு இடம் இல்லாமல் போய்விடுகிறது.

நாம் செய்யுங் கர்மங்கள் எல்லாவற்றுக்கும் ஒரு பலன் உண்டு. நாம் எதிர்பார்த்த பலன் கிடைக்காமல் போகலாம். அதை நாம் தோல்வி என்று சொல்ல முடியாது. நாம் தோல்வி அடைந்தோம் அல்லது எமதுசெயல் தோல்வி அடைந்தது என்றோ நினைப்பது தவறாகும். நமது எதிர்பார்ப்பு என்பது தவறாகிப் போய்விட்டதே ஒழிய, செயல் தோல்வி அன்று. எவ்விதமான பலன் ஏற்பட்டாலும் அதைப் பற்றிய எந்தவிதமான கலக்கமும் அடையா மல் வருகின்ற பலனை ஏற்றுக்கொள்ளும் மனப்பான்மையே யோகம் ஆகும். இதுவே ஈஸ்வர பிரசாதமாகவும் அமைகிறது.

ஒரு கர்மயோகி ஞானவிசாரத்திற்குத் தகுதி யுடைய நிலையை அடைந்து ஞானி ஆகின்றான். அவன் ஆசிரம அமைப்பில் துறவி ஆகாவிட்டாலும் ஞானத்தால் துறவியாகின்றான். இதுவும் நியதிக்கு ஒத்ததாகும் என்று பகவத்கீதையில் . பகவானால் வலி யுறுத்தப்பட்டுள்ள உண்மையாகும்.

உலகம் தோன்றிய காலந்தொட்டு எத்தனையோ மகான்களும்,ஞானிகளும் தோன்றியுள்ளார்கள். இவர்கள் எல்லோரும் சாதாரண குடும்பங்களில் தோன்றியவர்களே. இவர்கள் எப்படி தம்மை கடவுளின் நிலைக்கு உயர்த்தினார்கள், மரணம் இல்லாப் பெருநிலையை அடைந்தார்கள் என்று அறியும் ஆவலினால் ஏற்பட்ட தேடுதலின் ஒரு நிலையே இக்கட்டுரையாகும்.

# இறைவனின் கணக்கு

ஓர் ஊரிலுள்ள கோயில் வாசலில் இரண்டு வழிப்போக்கர்கள் இருந்தார்கள். சூரியன் அஸ்தமித்து இரவாகிவிட்டது. மழையும் தூறலாகப் பெய்துகொண்டிருந்தது. அவ்வழியே இன்னொருவர் வந்தார். அவர் இரவு தங்குவதற்கு இடமின்மையால், இந்த இருவரையும் பார்த்து, "உங்களுடன் இன்றிரவு நான் தங்கலாமா?" என்று கேட்டார். அதற்கு அவர்கள் சம்மதிக்கவே, மூவரும் அங்கே தங்கினர்.

சிறிது நேரம் போனதும், புதிதாக வந்தவர், "எனக்குப் பசிக்கிறது. உண்பதற்கு ஏதும் கிடைக்குமா?" என்று கேட்டார். அதற்கு முதலாவது மனிதர், தன்னிடம் 5 ரொட்டி இருப்பதாகச் சொன்னார். இரண்டாமவர் தன்னிடம் 3 ரொட்டி இருப்பதாகச் சொன்னார். அப்படியானால் 8 ரொட்டிகளை மூவரிடையே எப்படிச் சமமாகப் பகிர்வது என்று சிந்தித்தனர். புதிதாக வந்தவர், "எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது, அதன்படி செய்யலாம்" என்றார். "நீங்கள் இருவரும் உங்கள் ரொட்டிகளை மூன்று துண்டுகளாக வெட்டினால், 24 துண்டுகள் வரும். ஆளுக்கு 8 துண்டுகள் கிடைக்கும்" என்றார். எப்போதும் தேவை உள்ளவன் வழி காண்பான். அப்படியே மூவரும் தத்தமது பங்கை உண்டுவிட்டுக் கண்ணயர்ந்தனர்.

காலையில் எழுந்ததும், மழை நின்றுவிட்டது. புதிதாக வந்தவர் 8 பொற்காசுகளைக் கொடுத்து, நான் சாப்பிட்டதற்கு எனது பங்காக இதைக் கொடுக்கிறேன். நீங்கள் இருவரும் பகிர்ந்து கொள்ளுங்கள் என்றுவிட்டு அவர் போய்விட்டார்.

மூன்று துண்டுகளைக் கொடுத்தவர் சரி பாதியாகப் பிரிப்போம் என்றார். ஐந்து துண்டு கொடுத்தவர் அதற்குச் சம்மதிக்கவில்லை. எனக்கு 5 உனக்கு 3 என்றார். இதனால் இருவருக்கும் தகராறு ஏற்பட்டது. இருவரும் மன்னரிடம் முறையிட்டனர். மன்னருக்கும் அதை எப்படித் தீர்ப்பது என்று தெரியவில்லை. நாளைக்கு வாருங்கள் தீர்ப்பளிக்கிறேன் என்று அனுப்பிவிட்டார். இரவு மன்னனின் கனவில் இறைவன் வந்தார். அவர் வழங்கிய தீர்ப்பு மன்னருக்கு மிகுந்த ஆச்சரியத்தைக் கொடுத்தது.

அடுத்தநாள் மன்னர் அரசவைக்கு வந்தார். வழிப்போக்கரும் வந்தனர். மன்னர் 5 ரொட்டி வைத்திருந்தவருக்கு 7 காசும் 3 ரொட்டி வைத்திருந்தவருக்கு 1 காசும் கொடுத்தார். "இது அநியாயம். அவரே முதலில் எனக்கு 3 காசு தரச் சம்மதித்தார்" என்று இரண்டாவது வழிப்போக்கர் சத்தமிட்டார். அரசர் பின்வருமாறு தன் தீர்ப்புக்கான நியாயத்தை விளக்கினார். "3 ரொட்டியில் 9 துண்டுகளும் 5 ரொட்டியில் 15 துண்டுகளும் வந்தன. நீ 8 துண்டுகளை எடுத்துக்கொண்டு ஒன்றையே கொடுத்தாய். அவரோ 8 துண்டுகளை எடுத்தபின் 7 துண்டுகளைக் கொடுத்தார். அப்படியாயின் நான் பிரித்தது சரிதானே" என்றார் அரசர்.

**இதுதான் கடவுளின் கணக்கு. இது ஏட்டுக் கணக்கன்று. தருமக் கணக்கு.**

# கண்ணனும் தாத்தாவும்

- முத்து



இந்த வருடம் இலண்டன் நகரம் ஒருபோதும் கண்டிராத புதுவிதமான கோடைகாலம். ஆனி மாதத்திலிருந்து ஆவணி நடுப்பகுதிவரை கடும் வெய்யில். அன்று காலை ஒன்பதரை மணிதான், ஆனால் வெய்யில் நெருப்பாகக் கொழுத்துகிறது. யன்னல் ஊடாக வெளியே எட்டிப்பார்த்த தாத்தா, கோயிலுக்குப் போக எண்ணியதை மாலையிற் போவோம் என்று ஒத்திப்போடுகிறார். தனக்குத்தானே சிரித்தபடி சோபாவில் அமர்கிறார். கையில் தமிழ்ப் பத்திரிகை ஒன்றை எடுத்து வாசிக்க ஆரம்பிக்கிறார். தாத்தா தனக்குத்தானே ஏதோ சொல்லிச் சிரிப்பதைக் கண்ணன் ஆச்சரியத்துடன் பார்த்தபடி அவருக்குப் பக்கத்தில் வந்து அமர்கிறான்.

கண்ணன்: என்ன தாத்தா நீங்கள் உங்களுக்குள்ளேயே ஏதோ சொல்லச் சிரிக்கிறீர்கள்?

தாத்தா: ஆமாடா கண்ணா! கோயிலுக்குப் போகலாம் என்று வெளிக்கிட்டேன். வெய்யிலோ கொழுத்துகிறது. இது இலண்டனோ அல்லது யாழ்ப்பாணமோ என்று நினைத்தேன். எனக்குச் சிரிப்பு வந்தது.

கண்ணன்: ஓ.....! அப்படியா தாத்தா. முன்பு ஒருபோதும் இப்படி வெய்யில் வரவே இல்லையோ?

தாத்தா: இல்லையெடா கண்ணா! டெலிவிஷன் செய்தியிற்கூட அப்படித்தான் சொன்னார்கள்.

கண்ணன்: என்ன தாத்தா! வெய்யில் கொழுத்துகிறது என்று சொல்கிறீர்களே. நெருப்பைத்தான் கொழுத்துகிறது என்று சொல்வோம்.

தாத்தா: வெய்யில் நெருப்பைப்போலச் சூடாக இருக்கும்போது வெய்யில் நன்றாகக் கொழுத்துகிறது என்று சொல்வது உண்டு.

கண்ணன்: நீங்கள் யாழ்ப்பாணத்தைப் பற்றிச் சொன்னதும் எனக்குக் கட்டுரை எழுதும் ஞாபகம் வந்துவிட்டது தாத்தா. இப்போது எழுதுவோமா?

தாத்தா: ஓம் எழுதலாமே! நீ சாப்பிட்டுவிட்டு வா கண்ணா! எழுதுவோம்.

கண்ணன்: நான் அப்போதே சாப்பிட்டுவிட்டேன். நீங்கள் கோயிலுக்குப் போவதாகப்

பாட்டி சொன்னார். அதனாலே உங்களை விட்டுவிட்டு நான் சாப்பிட்டேன் தாத்தா!

தாத்தா: ஓ அப்படியா? அப்போ அப்பியாசப் புத்தகத்தை எடுத்துக்கொண்டு வா கண்ணா. எழுதலாம்.

(கண்ணன் ஓடிப்போய் அப்பியாசப் புத்தகம், பேனாவுடன் வந்து தாத்தாவுக்கு அருகில் அமர்கிறான், பாட்டி அந்தப் பக்கமாக வருகிறார்.)

பாட்டி: என்ன! ஒவ்வொரு நாளும் தாத்தாவும் பேரனும் பேசியே பொழுது போக்குவீர்கள். இன்றைக்கு ஏதோ எழுதப்போகிறீர்கள் போலத் தெரிகிறதே!

கண்ணன்: நான் தமிழ்ப்பள்ளியில் வீட்டுப் பாடமாகத் தந்த கட்டுரை எழுதப்போகிறேன். தாத்தா சொல்லித்தரப்போகிறார்.

பாட்டி: ஓகோ! நல்ல விஷயம். எதைப்பற்றியடா கண்ணா!

கண்ணன்: தாத்தா சின்னப் பையனாக இருந்தபோது எப்படி வாழ்ந்தார்? இப்போது இங்கே நான் எப்படி வாழ்கிறேன் என்பதை ஒப்பிட்டுப் பார்ப்பது பாட்டி.

பாட்டி: அதை எழுதுவது கஷ்டமேயில்லைக் கண்ணா! தாத்தா எப்படி வாழ்ந்தார் என்பதைக் கேட்டால் போதும். நீ எப்படி வாழ்கிறாய், என்ன செய்கிறாய் என்றெல்லாம் உனக்குத் தெரியுந்தானே கண்ணா. இரண்டையும் சேர்த்தால் கட்டுரை ஆகிவிடும்.

கண்ணன்: ஓம் அது எனக்குத் தெரியுந்தான். அதைக் கட்டுரையாக எப்படி என்னால் எழுத முடியும் பாட்டி?

தாத்தா: பாட்டி சொல்லித்தரப்போகிறார் கண்ணா!

பாட்டி: நான்தான் எனக்குத் தெரிந்ததைச் சொல்லவிட்டேனே. தாத்தா சின்னப் பையனாக இருந்தது எனக்கு எப்படித் தெரியும்? அதை அவர்தான் சொல்லவேண்டும்.

கண்ணன்: தாத்தாவைச் சின்னவயதில் நீங்கள் பார்த்ததே இல்லையா பாட்டி?

பாட்டி: நான் அவரைச் சிறுவயதில் பார்த்ததே இல்லைக் கண்ணா!

கண்ணன்: அப்படியா பாட்டி? அப்படியானால் அவரை எப்போது முதன்முதல் பார்த்தீர்கள்?

பாட்டி: (தனக்குள் இதென்னடா இவன் இடக்கு முடக்காக் கேள்வி கேட்கிறானே. நான் என் வேலையைப் பார்த்துக்கொண்டு போகாமல் வாயைத்திறந்து மாட்டிக்கொண்டேனே!) ஓ! அதுவா! நான் தாத்தாவைக் கல்யாணம் செய்தபோதுதான் பார்த்தேன்.

கண்ணன்: அப்படியானால் அவரை மணவறையிலேதான் பார்த்தீர்களோ?

பாட்டி: அதற்குக் கொஞ்சநாள் முன்பு கண்ணா. அந்தக் காலத்தில் அம்மா அப்பா பார்த்து நிச்சயிக்கும் மாப்பிள்ளையைப் பெண்கள் திருமணம் செய்வார்கள். இப்போது தாத்தாவுடன் சேர்ந்து கட்டுரையை எழுதத் தொடங்கு. நேரமாகிறது.

(பாட்டி பதில் சொல்ல முடியாது திக்குமுக்காடுவதை தாத்தா வெகுவாக இரசிக்கிறார்)

கண்ணன்: தாத்தா! நீங்கள் முதன்முதல் பாட்டியைப் பார்த்தபோது பாட்டி எப்படி இருந்தார்?

தாத்தா: கண்ணா! தாத்தா பாட்டியின் கல்யாணப் படங்கள் அல்பத்தில் இருக்கின்றன. பிறகு காட்டுகிறேன். அப்போது நீயே தெரிந்துகொள்வாய். சரி இப்போது உன் கட்டுரையைப்பற்றி நாங்கள் பேசுவோம்.

கண்ணன்: அது நல்ல யோசனை தாத்தா.

தாத்தா: சரி நீ இலண்டனில் எப்படி வசிக்கிறாய், ஒவ்வொருநாளும் என்ன செய்கிறாய், எப்படிப் பள்ளிக்குப் போகிறாய், பொழுது போக்காக என்ன செய்வாய் என்று சொல்.

கண்ணன்: நான் பள்ளிக்கூட நாள்களில் ஏழு மணிக்கு நித்திரைவிட்டு எழும்புவேன். பிறகு குளித்துவிட்டு வந்து உங்களுடன் சுவாமி கும்பிடுவேன். பிறகு சாப்பிட்டுவிட்டு எனது பள்ளிக்குப் போகும் சீருடையைப் (Uniform) போட்டுக்கொண்டு புத்தகப் பையை எடுத்துக்கொண்டு பள்ளிக்குப் போக ஆயத்தமாவேன். அப்பா என்னைக் காரில் கொண்டுபோய் பள்ளியில் விட்டுவிட்டுத் தன் வேலைக்குப் போவார். சரி நீங்கள் காலையில் அங்கே (உங்கள் வீட்டில்) என்ன செய்தீர்கள்? சொல்லுங்கோ தாத்தா.

தாத்தா: கண்ணா நான் வாழ்ந்தது யாழ்ப்பாணத்தில். அங்கே 6 மணிக்கு முதலே சூரியன் உதித்துவிடும். குளிர் இல்லாதபடியால் எல்லோரும் வேளைக்கே எழும்பிவிடுவார்கள். காலைக் கடன்களை முடித்துக்கொண்டு தங்கள் தங்கள் வேலையைச் செய்யத் தொடங்குவார்கள்.

கண்ணன்: காலைக்கடன் என்றால் என்ன தாத்தா?

தாத்தா: நித்திரையால் எழும்பியதிலிருந்து சாப்பிடப் போகும்வரை நீ என்னென்ன செய்வாய் கண்ணா? அதையெல்லாம் காலைக்கடன் என்று சொல்வது வழக்கம். அவை ஒவ்வொரு நாளும் எல்லோரும் தவறாது செய்யும் வேலைகள்.

கணணன்: ஓ.. இப்போது எனக்கு விளங்கிவிட்டது தாத்தா. பிறகு என்ன சாப்பிடுவீர்கள்?

தாத்தா: உனக்கு இங்கே அலுமாரியில் இருப்பதைப்போல சாப்பாட்டு வகையெல்லாம்

(Corn flakes, Rice crisps, அரிசிப்பொரி, Weetabix போன்றவை) அங்கே இருக்கவில்லை. அங்கே அம்மாமார் காலை 5 மணிக்கே எழும்பி கிணற்றில் தண்ணீர் எடுத்து , அடுப்பில் விறகு எரித்து இடியப்பம், பிட்டு, தோசை , ரொட்டி அதிலேதாவது ஒன்றைச் சமைத்து பிள்ளைகளுக்குக் கொடுத்துப் பள்ளிக்கு அனுப்புவார்கள். நண்பகல் சாப்பிடவும் கொஞ்சம் அதிலே கொடுத்து அனுப்புவார்கள்.

கண்ணன்: அப்படியானால் அம்மாவே தனியே எல்லாம் செய்வாரா?

தாத்தா: இல்லைக் கண்ணா, அங்கே வீட்டிலுள்ள எல்லோரும் சேர்ந்து செய்வார்கள். பெரிய பிள்ளைகள் தண்ணீர் எடுப்பது. அம்மாவுக்குச் சமைக்க உதவி செய்வது, சின்னப்பிள்ளைகள் வீட்டையும் முற்றத்தையும் கூட்டிப் பெருக்குவது, பெரிய பிள்ளைகள் தம்பி தங்கைக்குத் தேவையானவற்றைக் கவனித்துச் செய்துவிடுவர்.

கண்ணன்: அங்கே பிள்ளைகளும் வேலை செய்வார்களா? இங்கே அம்மா, அப்பாதானே பிள்ளைகளுக்கு எல்லாமே செய்கிறார்கள்.

தாத்தா: இங்கே வீட்டுக்குள்ளேயே எல்லா வசதிகளும் இருக்கே கண்ணா! முன்பு நாங்கள் கையாற் செய்த வேலையெல்லாம் இப்போது மெஷின் செய்கிறதே. அதனால் இங்கே அம்மா அப்பாவுக்கு வீட்டு வேலை மிகவும் குறைவு.

கண்ணன்: அவர்களுக்கு ஓய்வே இல்லையென்று சொல்கிறார்களே தாத்தா. Busy என்றே எல்லோரும் சொல்வதைக் கேட்டிருக்கிறேன்.

தாத்தா: அது அம்மா அப்பா இருவரும் வேலைக்குப் போதால் கண்ணா. இன்றைக்கு இது போதும் நாளைக்கு மிச்சத்தைப் பேசுவோம். இப்போது தோட்டத்தில் பூச்செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றுவோம். வெய்யிலில் விரைவாக வாடிப் போகிறது

கண்ணனும் தாத்தாவும் தோட்டத்துக்குப் போகிறார்கள்.

## குருவும் சீடனும்

**சீடன்:** குருவே! எனக்கு ஒரு சந்தேகம்
**குரு:** தயங்காமற் கேள் சீடனே!
**சீடன்:** குருவே! தாங்கள் பெரிய ஞானி. தாங்கள் சாமியார் ஆனபின் தங்களுக்கு ஞானம் வந்ததா அல்லது ஞானம் வந்தபின் சாமியார் ஆகினீர்களா?
**குரு:** (சிரித்துவிட்டு) ஞானம் வந்ததனாலேயே நான் சாமியாகினேன் சீடனே!
**சீடன்:** அப்படியா? சாமியார் ஆகியபின்தானே ஞானம் கிடைக்கும் என்று பலரும் சொல்கிறார்கள்?
**குரு:** அட மூடச் சீடனே! ஞானம் என்பது என் மனைவியின் பெயர்.

# திருவாவடுதுறை திருத்தலத்தின் தனிச்சிறப்புகள்

- பசுவாக வந்த உமையன்னை தமது பதியை (சிவபெருமானை) பாசத்துடன் வழிபட்டு பேறுபெற்ற பதி என்பதே இவ்வூரின் முதன்மைச் சிறப்பாகும்.
- இல்லறத்தார் இடர்களைக் களைய அணைத்தெழுந்த நாயகராய் தனிச் சந்நிதி கொண்டு அருள் பாலிக்கும் திருத்தலம்.
- சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற நால்வர் பெருமக்களால் பாடப்பெற்ற திருத்தலம்.
- தேவர்கள் இத்தலத்தில் படர் அரசமரமாக விளங்க அதன் கீழ் (போதியம்பலம்) இறைவன் திருநடனம் செய்த திருத்தலம்.
- தருமதேவதை இத்தலத்தில் இறைவனை வழிபட்டு, அவருக்கு வாகனமாகும் பேறுபெற்ற இத்தலத்திலேயே பெரிய நந்தியாக எழுந்தருளிய நந்தித் திருத்தலம்.
- இத்தலத்தில் இறைவன் திருமாலுக்குத் துளசிமாலை அணிவித்து பிருந்திமயல் தீர்த்தருளிய புராணத் திருத்தலம்.
- அழகிய விநாயகர் அகத்தியருக்கு ஞானோபதேசம் செய்தருளிய திருத்தலம்.
- குருத்துரோகம் புரிந்த அக்னி தேவருக்கும், வெண்குட்டைநோய் பற்றிய அகத்தியருக்கும் சாபவிமோசனம் அளித்தருளிய பரிகாரத் திருத்தலம்.
- சிவபெருமானின் வியர்வைத்துளியிலிருந்து பிறந்த செவ்வாய், கிரகப்பதம் பெற்ற, செவ்வாய்கிழமையில் அன்னதானம் செய்து பேறுபெற்ற திருத்தலம்.
- திருஞானசம்பந்தர் தம் தந்தையின் வேள்விக்காக இத்தலத்து இறைவனிடமிருந்து பூதம் வாயிலாக 1000 பொற்காசுகள் இக்கோயிலின் பலிபீடத்தில் பெற்ற தங்கத் திருத்தலம்.
- சுந்தரமூர்த்தி நாயனார் தம் உடற்பிணி தீர உளமுருகி இத்தலத்து இறைவனைப் பாடியருளிய தேவாரத் திருத்தலம்.
- முகுந்த மாமன்னனுக்கு மகப்பேறு அருளி இத்திருத்தலத்தைத் திருவாரூராகவும், தம்மைத் தியாகேசராகவும் இறைவன் காட்டியருளிய வரந்தரும் திருத்தலம்.
- திருமூலர் இத்தலத்தின் அரசமரத்தின் கீழ் 3000ஆண்டுகள் யோகியாயிருந்து 3000 பாடல்கொண்ட திருமந்திர ஞானப்பெருநூலை அருளிய திருமந்திரத் திருத்தலம்.
- திருமாளிகைத்தேவர் இத்தலத்து இறைவனை நாள்தோறும் வழிபட்டு பல அற்புதங்களை நிகழ்த்திய திருத்தலம்.
- அகத்தியர், திருமூலர், திருமாளிகைத்தேவர், போகர், கருவூர்த்தேவர், கொங்கணச்சித்தர் முதலான நவகோடிச்சித்தர்கள் இத்தலத்து இறைவனை வழிபட்டு அட்டமாசித்திகளைப் பெற்றுவந்த சித்தர்வாழ் திருத்தலம்.
- கோச்செங்கட்சோழன், சேரமான் பெருமாள் நாயனார், வரகுணபாண்டியன் என மூவேந்தர்களும் இத்தலத்தில் தனித்தனி லிங்கங்கள் பிரதிஷ்டை செய்து வழிபட்டுப் பேறுபெற்ற தலம்.
- இத்தலத்து இறைவனருளால் சித்தர் சிவப்பிரகாசர் நமச்சிவாய மூர்த்திகளைக் கொண்டு திருவாவடுதுறை ஆதீனம் ஸ்தாபிதம் செய்தருளிய திருத்தலம்.

# திகைக்கவைக்கும் தில்லை

## முனைவர் வாசுகி கண்ணப்பன்

இந்த உலகம், நம் உடம்பு பஞ்சபூதங்களினால் ஆனது. நிலத்திற்கு காரணம் நீரும், நீருக்குக் காரணம் நெருப்பும், நெருப்புக்குக் காரணம் காற்றும், காற்றுக்குக் காரணம் ஆகாயமுமாக இருக்கிறது. ஆகவே அனைத்திற்கும் காரணமான ஆகாயம் என்ற அம்பரத்தின் வியத்தகு உண்மை நிலையை எண்ணி உலகத்தையே சிந்திக்கவைத்தத் தலம், உணரப்பட்டு, அற்புதத்தால் திகைக்கவைக்கும் தலம் தில்லை; சிதம்பரம். இவ்வூரின் இயற்பெயர் தில்லை மரங்கள் நிறைந்த நிலையில் தில்லை வனம் என்றும், பெரும் பற்றினால் புலிப்பாணி சித்தர் பூசித்த தலம் என்பதால் பெரும்பற்றப் புலியூர் என்றும் அழைக்கப்பட்டது. கோயிலின் பெயரே பின் நாளில் ஊரின் பெயராகியது. இத்தலம் பூலோக கைலாசம் என்றும் அழைக்கப் படுகிறது..

சிதம்பரம், சித் + அம்பரம் = சிதம்பரம். சித் என்றால் ஞானம் அல்லது அறிவு. அம்பரம் என்றால் வெட்டவெளி, அதாவது ஆகாயம், ஞான வெட்டவெளி, மனிதா, உன்னிடம் ஒன்றுமே இல்லை என்பதுதான் ரகசியம். சைவத்தில் கோயில் என்றாலே சிதம்பரத்தைத்தான் குறிக்கும். இங்கு இறைவன் நடராசராக உருவமாகவும், ஸ்படிக லிங்கமாக அருவுருவமாகவும், ஆகாயமாக அருவமாகவும் அருள் பாலிக்கின்றார். நடராசர் வடிவம் படைப்பின் தொடக்கத்தைப் பரவெளியிலிருந்து ஒரு நாட்டியம்போலத் தன்னை முக்கியமாக வெடித்துக் கிளம்பிய விதத்தைக் குறிப்பதாகும்.

கிருத்தவர்கள் நிரம்பியுள்ள சுவிச்சர்லாந்து நாட்டின் நகரமான ஜெனிவாவில், 24 நாடுகள் அங்கம் வகிக்கும் CERN எனப்படும் ஐரோப்பிய அணு ஆராய்ச்சி மையம், தமது மையத்தின் முகப்பில், இந்திய அரசு பரிசாக அளித்த நடராஜர் சிலையை வைத்து நடராசரின் உண்மைத் தத்துவத்தை நிலை நிறுத்தியுள்ளது என்றால் நாம் அதுபற்றிக் கொஞ்சம் சிந்திக்கவேண்டும். அணுத்துகள்கள் எப்பொழுதும் அசைந்துகொண்டே இருக்கும். இவ்வுண்மையை நடனமாடும் நடராசர் வழியாக உணர்த்தும்படி சிலை அமைத்துள்ளனர் என்கின்றனர் ஆராய்ச்சி செய்யும் அறிஞர்கள். உலகில் மிகப் பெரும் இயற்பியல் விஞ்ஞானி காரல் சகன், டாக்டர் பிரிட்ஜா்.ப் காப்ரா போன்ற பலரும் ஆராய்ந்து வியந்து போற்றியுள்ள சிதம்பர நடராசர், நம் தமிழர்களின் மாபெரும் சொத்து; வாழ்க்கையின் இரகசியத்தை எடுத்தியம்பக்கூடிய நல் வித்து; இரகசியத்தை உணர்ந்தவர்கள் தெளிந்தனர் பித்து.

இக்கோயிலின் அருமையை, பெருமையை சிந்தித்து, ஆராயும்போது கிடைக்கும் தகவல்கள் நம்மை திகைக்க வைக்கின்றன. இக்கோயிலிலுள்ள அறிவியல், பொறியியல், புவியியல், கணிதவியல் மருத்துவவியல் குறித்த வியக்கத்தக்க செய்திகள், நம் முன்னோர்கள் எத்தகைய சக்தி கொண்ட வர்கள், சிந்தனைத் தெளிவு கொண்டவர்கள், அறிவியல் ஆற்றல் கொண்டவர்கள் என்பதை எண்ணி எண்ணி வியப்பின் எல்லைக்கே நம்மைக் கொண்டு செல்கின்றன. தொழில் நுட்ப சாதனங்கள் இல்லாத அக்காலத்தில் உருவாக்கிய இந்த கோயிலுக்கு ஈடான உலக அதிசயம் இருக்க முடியுமா? என்று நினைக்கும்போது மெய் சிலிர்த்துப்போகிறது. எத்தனை வியப்புகள் பொதிந்து கிடக்கின்றன.

**வியக்கவைக்கும் வியப்புகள்:**

1. இக்கோயில், உலகத்தின் இருதயம். உலகின் பூமத்தியரேகையின் துல்லியமான மையப் புள்ளியில் அமைந்துள்ளது என்ற செய்தி (Centre Point of World's Magnetic Field) சில

கோடி டாலர்களைக்கொண்டு செய்த ஆராய்ச்சியில், பூமியின் காந்த மையப்புள்ளி நடராசரின் கால் பெருவிரலில் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளார்கள். அண்ட வெளியில் செலுத்தப்படும் எந்த விஞ்ஞான சாதனங்களும் இந்தக் குறிப்பிட்ட புள்ளியில் வரும்போது செயலிழந்து போவதைக் கண்டு விஞ்ஞானிகள் வியந்துள்ளனர். இக்கோயிலின் இறைவன் நடராசரின் இயக்கத்தால் இவ்வுலகம் இயங்கிக் கொண்டிருக்கின்றது என்று உணர்ந்துள்ளனர் அறிஞர்கள்.

2. பஞ்சபூதத் தலங்கள் அனைத்தும் ஒரே நேர்கோட்டில் அமைந்துள்ளன. அதாவது நிலத்தைக் குறிக்கும் காஞ்சி ஏகாம்பரேசுவரர் கோயில், நீரைக்குறிக்கும் ஜம்புகேஸ்வரர் கோயில், காற்றைக் குறிக்கும் காலஹஸ்தி கோயில், நெருப்பைக் குறிக்கும் திரு அண்ணாமலை, ஆகாயத்தைக் குறிக்கின்ற தில்லை நடராசர் கோயில் இவை அனைத்தும் சரியாக நேர்கோட்டில் அதாவது சரியாக 79 degrees, 41minutes East தீர்க்கரேகையில் (Longitude) கற்பனை பண்ணிப்பார்க்க முடியாத வகையில் அமைந்துள்ளன. எந்தவித விஞ்ஞான வசதிகளும் இல்லாத அக்கால கட்டத்தில் இவை அமைக்கப்பட்டுள்ளன என்று எண்ணிப்பார்க்கும்போது நம் முன்னோர்களின் பொறியியல், புவியியல், வானவியலின் அறிவுக் கூர்மை, நம்மை எண்ணி எண்ணி வியக்கவைக்கின்றது.

3. மனித உடலின் அடிப்படையைக்கொண்டு அமைக்கப்பட்டிருப்பது இக்கோயில். நமது உடலில் இருக்கும் வாயில்கள் 9. சிதம்பரம் கோயிலின் நுழைவு வாயில்களும் 9.

4. உடம்பானது 5 கோசங்கள் அதாவது சுற்றுகளைக கொண்டது. அதேபோல் இக் கோயிலிலும் 5 திருச்சுற்றுகள் என்ற பிரகாரங்களைக்கொண்டது.

6. மனிதனுக்கு இதயம் இடதுபக்கம் உள்ளதுபோல் இங்கு மூலவரின் கருவறை நடுவில் இல்லாமல் இடப்பக்கமாக அமைந்துள்ளது.

7. இதயத்தின் துடிப்பே நடராசரின் நடனமாக உருவகிக்கப்பட்டுள்ளது.

8. சிதம்பரம் கோயிலின் மேல் உள்ள பொன்னாலான கூரை 21,600 தங்கத் தகடுகளைக்கொண்டு வேயப்பட்டுள்ளது. ஒரு மனிதன் ஒரு நாளைக்குச் சராசரியாக சுவாசிப்பது 21600 முறை என்று கணக்கிடப்பட்டுள்ளது.

9. இந்தத் தங்கத் தகடுகள் 72.000 தங்க ஆணிகளால் பொருத்தப் பட்டுள்ளன என்கின்றனர். மனித உடலில் உள்ள மொத்த நாடிகள் 72,000 என்று கூறப்படுகின்றது. உடலில் உள்ள கண்ணுக்குத்தெரியாத அனைத்து பாகங்களுக்கும் சக்தியைக் கொண்டு செல்வதுவரை இதில் அடங்கும். இதனையெல்லாம் உணர்ந்துதான் திருமூலர் அன்றே பாடியுள்ளார் என்பது மேலும் ஒரு வியப்பான செய்தியாகும்.
அவர் பாடியது:

**"மானுட ராக்கை வடிவு சிவலிங்கம்**
**மானுட ராக்கை வடிவு சிதம்பரம்**
**மானுட ராக்கை வடிவு சதாசிவம்**
**மானுட ராக்கை வடிவு திருக்கூத்தே"**

இதன் மூலம் வியக்கவைக்கும் பொருள் என்னவெனில் மனிதன் வடிவில் சிவலிங்கம், சிதம்பரம், சதாசிவம், அவனது திருக்கூத்து என்பதாகும். எவ்வளவு பெரிய உண்மை. அதே திருமூலர் மேலும் இக்கூற்றை வலியுறுத்தும் வண்ணம்,

**"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்**
**வள்ளல் பிரானுக்கு வாய் கோபுர வாசல்**
**தெள்ளத்தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே"**

எனப் பாடியுள்ளது மேலும் மேலும் வியப்பளிக்கிறது. மேலே கூறிய கருத்துகளுக்கு அச்சாணியாகிறது. என்னே முன்னோர்களின் திறமை, ஆற்றல், ஞானம்.

10. 5 படிகள் ஏறித்தான் நடராசரை அடைய முடியும். இந்த 5 "சிவாயநம" என்ற பஞ்சாட்சர மந்திரமாகும். அதனால் இந்தப்படிகளைப் பஞ்சாட்சரப் படிகள் எனக் குறிக்கப்படுகிறது.

11. கனகசபையைத் தாங்கி நிற்கும் 4 தூண்கள் 4 வேதத்தை குறிக்கின்றன.

12. பொன்னம்பலத்தின் 28 தூண்கள் 28 ஆகமங்களையும், சிவபெருமானை வழிபடும் 28 வழிகளையும் குறிக்கின்றன.

13. இந்தத் தூண்களுக்கான கட்டுமானப் பலகைகள் (Beam) 64. ஆய கலைகள் 64ஐக் குறிக்கின்றன. குறுக்குப் பலகைகள் (Cross Beams) மனித உடம்பிலுள்ள இரத்த நாளங் களைக் குறிக்கின்றன.

14. அர்த்த மண்டபத்திலுள்ள 6 தூண்கள் 6 சாஸ்திரங்களையும், அருகிலுள்ள மண்டபத்திலுள்ள 18 தூண்கள் 18 புராணங்களையும் குறிப்பிடுகின்றன.

15. சிதம்பர நடராசர் ஆடிக்கொண்டிருக்கும் ஆனந்தத் தாண்டவம் என்பதை Cosmic dance என்று வெளிநாட்டு அறிஞர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

16. சிதம்பர ரகசியமாகக் காட்டப்படும் தங்க வில்வ மாலை இறைவன் ஆகாய உருவில் இருக்கின்றார் என்பது. அதாவது இறைவன் தொடக்கமும், முடிவும் இல்லாதவன் என்பதை உணர்த்துவதாக அமைந்துள்ளது.

விஞ்ஞானத் தொழில் நுட்பங்களால் போட்டிபோடமுடியாத சிறப்புகளை, நம்முன்னோர்கள் தங்கள் மெய்ஞ்ஞான அறிவால் உருவாக்கும் சக்தி பெற்றவர்கள் என்பதற்கு சாட்சியாகக் கூற தில்லை சிதம்பரம் ஒன்று போதும்.

இப்படிப்பட்ட திகைக்கவைக்கும் தில்லை சிதம்பரம் கோயில் அனைத்து ஆராய்ச்சியாளர்களையும் சிந்திக்க வைத்தது, அதிசயிக்க வைத்தது என்பதை நாமும் உணர்வோம், பெருமைகொள்வோம்.



# Hinduism in search of Answers.........

Compiled by S Atputhananthan

## AT HOME

### Viratham and Fasting:

**Viratham means 'to observe a rule, vow, discipline, law or duty'. In common usage, it is an act of devotion, duty, commitment, spiritual practice, resolve or moral or mental discipline.** In ritual terms Viratham means following or observing a discipline or a strict code of conduct to please a deity or fulfil a promise.

The word Viratham (Vrta) is rooted in the Vedic concept of rta or rita, which mean order and regularity. "Vr," means will, rule, discipline and "rta," means order. Viratham means orderly conduct or discipline.






### The purpose of virathams:

Virathams are observed by people either to fulfil desires or to express gratitude for fulfilment of desires. They are also practiced to overcome suffering and adversity, neutralise the adverse effects of planets or evil forces, remove birth related defects ('doshas') in the natal charts, win the approval of a wrathful deity, express regrets as part of a penance, acquire spiritual power, help a family member or child who is in distress, and so on.

Through Virathams you bring order and discipline into your life. It helps you strengthen your resolve and your commitment to your faith. It is also very useful to practice self-cleansing and train your mind and body to cultivate 'sattva guna'.

Viratham is a form of sacrifice (yajna) in which you are sacrificing your comfort and dependence upon food, for a greater end.

References to the virathams are found in the Samhitas, Brahmanas and Aranyakas of all the four Vedas.

## Rules and Observances:

A simple viratham involves observance of a particular code of conduct, rules and restraints, or abstinence from certain habits and desires of the mind. Each viratham usually begins with an intention or resolve. Whatever may be the reasons, virathams are the most commonly suggested solutions to worldly problems in Hinduism.

Most virathams are named after the days on which they are performed.





In some virathams devotees have to abstain from specific types of food or food substances, such as meat, sour things, salt, or they may have to subsist entirely upon specific foods such as milk or fruit juice. Apart from fasting and other observances, it is common for devotees to perform a puja or a devotional service with offerings and prayers.

Cleanliness, ritual baths and abstaining from - sex, unclean food, foul speech, and evil people - are common observances for most virathams. Some of them also require people to remain awake in the night.

Many virathams are incomplete if it does not involve giving (dana) at the end of it.
When virathams are performed, we have the right to actions only. The results are not in your hands since they depend upon many known and unknown factors, including your past karma.

## Fasting:




**Fasting (or abstinence from food/drink) is one aspect of Viratham.**

Fasting develops the 'will power' of a person and enables him/her to gradually control the mind in all activities. When fasting is done for spiritual reasons it intensifies 'devotion'. It also helps cleanse the body and thus improve health. In the meanest of interpretation, it saves money! Whichever way one looks at it – spiritually or scientifically, fasting has a positive effect in humans.

Fasting, undertaken with the view to self-restraint, can help to curb animal passions.

"He who controls the senses by the mind and engages his active organs in works of devotion, without attachment, is by far superior." (Bhagavat Gita 3.7)

"He who is temperate in his habits of eating, sleeping, working and recreation can mitigate all material pains by practicing the yoga system." (Bhagavat Gita 6.17)

Some Hindus fast on certain days of the month such as Ekadasi, Pradosha, etc.

Certain days of the week are also set aside for fasting depending on personal belief and favourite deity. For example, devotees of Shiva tend to fast on Mondays, while devotees of Murugan tend to fast on Fridays. Tuesday fasting is common in Southern India and is dedicated to Goddess Mariamman, a form of Goddess Shakti. Thursday is dedicated to Guru and many Hindus who follow a guru will fast on this day. Fasting during religious festivals is also very common. Common examples are Maha Shivarathri and/or the nine days of Navratri.

Methods of fasting vary widely. Fasting can also mean limiting oneself to one meal during the day, abstaining from eating certain food types or eating only certain food types. In any case, the fasting person is not supposed to eat any animal products (i.e., meat, eggs) except dairy products.

Yudhishthira asks Bhishma, "what constitutes the highest penances?" Bhishma states, "....there is no penance that is superior than abstention from food" (-Mahabharata)

Fasting has also been practiced in India for centuries as a penance for the expiation of sins, dereliction of duties, crimes, etc.

It is customary for those who participate in Hindu domestic ceremonies, including marriage ceremonies and pujas on specific occasions, to abstain from eating food until the completion of such ceremonies. In most cases, people break their fast after performing sacrifices or rituals and eating the remains of the food, called prasadam which was first offered to gods.

On the occasion of certain Hindu festivals such as Maha Shivaratri and Skanda Shashti Puja the worshippers have to observe fasting either for a day or for a number of days.


Those who undertake virathams or vows to worship deities in a specific traditional manner also follow a strict code of conduct with regard to their eating and other activities. On such occasions, they either observe complete fasting or avoid eating certain types of food such as sour items, curd, etc.

Whatever Viratham or Fasting you may practice in today's world, sincerity and purity of intention are important. If you want to fast selectively, you may have to consider your body's tolerance for certain types of food, and if necessary, make such decisions in consultation with your physician.

It is important what food you eat after you complete a prolonged fasting and consult your physician before making such attempt.

Overall, fasting in moderation is good for the mind and the body. It purifies the system, besides making you feel light and good. Medical research proves that the habit of fasting prolongs life and keeps the body in good shape.

## Why do we light a lamp?:



In almost every Indian home a lamp is lit daily before the altar of the Lord. In some houses it is lit at dawn, in some, twice a day – at dawn and dusk – and in a few it is maintained continuously (akhanda deepa). All auspicious functions commence with the lighting of the lamp, which is often maintained right through the occasion.


Light symbolises knowledge, and darkness symbolises ignorance. The Lord is the "Knowledge Principle" (chaitanya) who is the source, the enlivener and the illuminator of all knowledge. Hence light is worshiped as the Lord himself.

Knowledge removes ignorance just as light removes darkness. Also, knowledge is a lasting inner wealth by which all outer achievement can be accomplished. Hence, we light the lamp to bow down to knowledge as the greatest of all forms of wealth.

Why not light a bulb or tube light? That too would remove darkness. But the traditional oil lamp has a further spiritual significance. The oil or ghee in the lamp symbolises our vaasanas or innate tendencies and the wick, the ego. When lit by spiritual knowledge, the vaasanas get slowly exhausted and the ego too finally perishes. The flame of a lamp always burns upwards. Similarly, we should acquire such knowledge as to take us towards higher ideals. Whilst lighting the lamp we thus pray:

I prostrate to the dawn/dusk lamp; whose light is the Knowledge Principle (the Supreme Lord), which removes the darkness of ignorance and by which all can be achieved in life.
Swami Chinmayananda


## Why do we have a prayer room?:



Most Indian homes have a prayer room or alter. A lamp is lit and the Lord worshipped each day. Other spiritual practices like japa (repetition of the Lord's name), meditation, paaraayana (reading of the scriptures), prayers, and devotional singing etc is also done here. Special worship is done on auspicious occasions like birth days, anniversaries, festivals and the like. Each member of the family – young or old – communes with and worships the Divine here.

The Lord is the entire creation. He is therefore the true owner of the house we live in too. The prayer room is the Master room of the house. We are the earthly occupants of His property. This notion rids us of false pride and possessiveness.

The ideal attitude to take is to regard the Lord as the true owner of our homes and ourselves as caretakers of His home. But if that is rather difficult, we could at least think of Him as a very welcome guest. Just as we would house an important guest in the best comfort, so too we felicitate the Lord's presence in our homes by having a prayer room or altar, which is at all times kept clean and well-decorated.



Also, the Lord is all pervading. To remind us that He resides in our homes with us, we have prayer rooms. Without the grace of the Lord, no task can be successfully or easily accomplished. We invoke His grace by communing with Him in the prayer room each day and on special occasions. Each room in a house is dedicated to a specific function like the bedroom for resting, the lounge to receive guests, the kitchen for cooking etc. The furniture, decor and the atmosphere of each room are made conducive to the purpose it serves. Similarly, for the purpose of meditation, worship and prayer, we should have a conducive atmosphere – hence the need for a prayer room. Sacred thoughts and sound vibrations pervade the place and influence the minds of those who spend time there. Spiritual thoughts and vibrations accumulated through regular meditation, worship and chanting done there pervade the prayer room. Even when we are tired or agitated, by just sitting in the prayer room for a while, we feel calm, rejuvenated and spiritually uplifted.

# Food for Thought

***I object to violence because when it appears to do good, the good is only temporary; the evil it does is permanent.***

***Happiness is when what you think, what you say, and what you do are in harmony.***

***Freedom is not worth having if it does not include the freedom to make mistakes.***

***In matters of conscience, the law of the majority has no place.***

***Honest disagreement is often a good sign of progress.***

***Strength does not come from physical capacity. It comes from an indomitable will.***

***As long as you derive inner help and comfort from anything, keep it.***

***Hate the sin, love the sinner.***

***- Gandhi***

# அன்புள்ள ஆசிரியருக்கு.........

இவ்வாண்டு ஆவணி மாதம் வெளிவந்த ஆசிரியர் தலையங்கம் மிகவும் யதார்த்த மாகவும் உண்மையைச் சுட்டிக் காட்டுவதாகவும் இருந்தது. பஞ்சபுராணம் தவறின்றி ஓதப்பட வேண்டும் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்துக் கிடையாது. அனைத்துக் கோயில் களிலும் விதவிதமான முறைகளில் பஞ்ச புராணம் பாடப்படுகிறது. சில கோயில்களில் ஓதுவார் பண்ணோடும் இசை யோடும் பாடுவார். ஓதுவார் இல்லாத ஆலயங்களில் படித்துப் பயிற்சி உள்ளவர்கள் பண்ணோடு மாத்திரமன்றிப் பொருள் உணர்ந்தும் பாடு வார்கள். பஞ்சபுராணம் என்றால் என்னவென்று உணராத சிலர் தொடர்ந்து பாடிக்கொண்டே போவார்கள், அதை யாரும் குறை சொல் வதில்லை. அது பக்தியின் வெளிப்பாடென்றே மற்றோர் எண்ணுவார்கள்.

இதைச் சுட்டிக்காட்டி நான் இப்போது சொல்ல விழைவது என்னவென்றால், சிவகாமி சிதம்பரேஸ்வரர் கோயிலில் வெள்ளிக்கிழமை களில் புத்தகம் பார்த்துப் படிப்பதுதான் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டு வருகிறது. பயிற்சி முறையாகக் கிடைக்கும்போது அவர்கள் மனப்பாடம் செய்து திறமையாகப் பாடுவார்கள் என எதிர்பார்ப்போம். பஞ்ச புராணம் பாடுவதற்குத் தகுதியானோர் இங்கே ஒதுக்கப்படும்போது, யாருக்கும் பஞ்சபுராணம் பிழையின்றிப் பாடத் தகுதியில்லை என்ற முடிவுக்கு ஆசிரியர் வருவது சரியல்ல. சமயமும் தமிழும் இரு கண்களாகக் கொண்ட கலசம் ஆசிரியருக்குச் சிவகாமி சிதம்பரேஸ்வரர் கோயிலில் எத்தனை பெண்கள் பிழையின்றிப் பஞ்சபுராணம் பாடக்கூடியவர்கள் உள்ளனர் என்று தெரியவில்லை? பஞ்சபுராணம் பாடலாமா என்று கேள்வி எழுப்பிய ஆசிரியர், பெண்கள் ஏன் பஞ்சபுராணம் பாடக்கூடாது என்ற எனது கேள்விக்கு என்ன பதில் கூறப்போகின்றார்? லூயிஷாம் சிவன் கோயிலில் ஓதுவார் மாத்திரம் பஞ்சபுராணம் பாடுவதாக எழு தியிருக்கிறார். ஏன், அங்கே ஒரு வெள்ளை இனப் பெண்மணி அழகாகப் பாடுவது U tube இல் கூட வருகிறதே!

ஈழத்தில்கூட எல்லா ஆலயங்களிலும் பெண்களால் பஞ்சபுராணம் பாடப்படுகிறது. லண்டனிலும் எல்லாத் தலங்களிலும் பாடப் படுகிறது. சிவகாமி சிதம்பரேஸ்வரர் கோயிலில் மாத்திரம் ஏன் இந்த விதிவிலக்கு?

தன்னிலே சரிபாதியைச் சக்திக்கு அளித்து அர்த்தநாரீஸ்வரராக விளங்கிவரும் இறை வனுக்கு ஏன் இந்தப் பாகுபாட்டைக் காட்ட வேண்டும்? எங்கள் சமயத்தில் பெண்களைத் தாழ்த்தியோ பாகுபாடு காட்டியோ நடத்தப் பட்டதாகக் காட்டப் படவில்லை. புராணங்களில் கூறப்படும் காரைக்கால் அம்மையார் தொடக்கம் எமது பெருமதிப்புக்குரிய சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி போன்ற சமயப் பற்றாளர் வரை இறையடியார்கள் இருந்துள்ளனர்.

திருவாசகத்தில் மாணிக்கவாசகர், "வேண்டும் மெய்யடியார்" என்று கூறுகிறாரே தவிர, ஆண் அடியார், பெண் அடியார் என்று கூறவில்லை. திருஞானசம்பந்தரோ "பெண்ணின் நல்லா ளொடும் பெருந்தகை இருந்ததே" என்கிறார். இப்படி எத்தனையோ கூறலாம்.

"பஞ்சபுராணம் பாடலாமா?" என்ற தங்கள் கேள்வி யாருக்காக? இங்கே பெண்கள் பஞ்சபுராணம் பாட அநுமதிக்கப்படுவதில்லை என்ற சங்கதி தமக்குத் தெரியாதா? தாமும் இதற்கு உடந்தையா?

இதில் தனிப்பட்ட எவரையும் குறைகூறும் எண்ணம் எனக்கில்லை. ஆனால், உரியவர்களின் மனக் கதவுகளைத் திறப்பதற்கு கலசம் பத்திரிகையும் அதன் ஆசிரியரும் ஆதரவளிக்கவேண்டும்.

மாற்றம் ஒன்றே மாறாதது.

**திருமதி புவனேஸ்வரி சபாரத்தினம்**

# ஆசிரியரின் பதில்......

தங்கள் கடிதத்துக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதற்கான காரணங்கள் இரண்டு:

1. தலையங்கத்தை ஒருசிலராவது படிக்கின்றார்களே; நாம் எழுதுவது செவிடன் காதில் ஊதிய சங்காகப் போகவில்லை என்ற மகிழ்ச்சி.
2. மனதில் தோன்றிய கருத்தை மறைக்காமல் அப்படியே பகிர்ந்து கொள்ளத் தாங்கள் நினைத்தமை; தயங்காது அதைத் தெரிவித்தமை. இதையே நானும் விரும்புகிறேன்.

புத்தகம் பார்க்காமல் பிழையாகத் தேவாரம் ஓதுவதைவிட பார்த்துச் சரியாக ஓதுவது மேலானது என்பது என் கருத்து. பார்த்துப் பாடியும் சிலர் பிழைவிடுகின்றார்கள் என்பது வேறு விஷயம்.

தலையங்கத்தில், நான் பொதுவாக, எந்தக் கோயிலிலும் - உலகத்தில் எங்குள்ள கோயிலாக இருந்தாலும் - தகுதியற்றவர் பாடக்கூடாது என்று கருத்துப்படத்தான் எழுதியுள்ளேன்.

அருள்மிகு சிவகாமசுந்தரி உடனுறை சிதம்பரேஸ்வரர் கோயிலில் தேவார வகுப்பில் ஓதுவார் மூர்த்தியிடம் தேவாரம் பயிலும் பெண்கள் பலர் இருக்கிறார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். பாடுவார்களா, இல்லையா என்பதை அவர்கள் பாடிக் கேட்டால் மட்டுமே கூறமுடியும். என் தலையங்கத்திலும், இசையுடன் பாட இயலாவிட்டாலும் பிழையின்றிப் பாடினாலே போதும் என்ற கருத்தையும் பதிவுசெய்துள்ளேன். இல்லையேல், சங்கீத வித்துவான்கள் மட்டுமே ஓத இயலும்.

எனது தலையங்கத்தில் எந்த இடத்திலும் பெண்கள் பஞ்சபுராணம் பாடக்கூடாது என்று நான் குறிப்பிடவில்லை. சிவாகம விதிகளிலும் அப்படி ஏதாவது இருக்கிறதா, பெண்கள் பாடக்கூடாதா என்று எனக்குத் தெரியவில்லை. ஒரு முறை, 2010 இல், சிதம்பரம் கோயிலில் பங்குனி உத்தரத்தன்று நான் போயிருந்தபொழுது காலைப் பூசையில் ஒரு பெண் பஞ்சபுராணம் ஓதினார். தீட்சிதர்கள் யாரும் அவரைத் தடுக்கவில்லை. சிதம்பரம் கோயிலில் ஆறுகாலப் பூசைகளிலும் பஞ்சபுராணம் ஓதும் வழக்கம் உள்ளது. மாலையில் மட்டும் ஓதுவார் ஒருவர் ஓதுகிறார். ஏனைய நேரங்களில் யாரும் ஓதலாம். மார்கழியில் திருவெம்பாவை ஓதுவது அங்கே மிக முக்கியம்.

லூயிஷாம் சிவன்கோயிலில் ஓதுவார் மட்டும் பஞ்சபுராணம் பாடுவதாக நான் எழுதவில்லை. "லூயிஷாம் சிவன்கோயிலில் மட்டும் ஓதுவார் மூர்த்தியை இதற்கென (தேவாரம் ஓதவென) ஏற்பாடு செய்துள்ளார்கள்" என்றுதான் எழுதியுள்ளேன். வழமையாக, பெரும்பாலும் ஓதுவார்தான் அங்கே பஞ்சபுராணம் ஓதுவார். அதுதான் அந்தக் கோயிலின் விதிமுறை. அவர் இல்லாத காலங்களில், விடுமுறை, சுகம் இன்மை போன்ற காலங்களில், வேறு யாராவது ஓதுவார்கள். அதுவும் அந்தக் கோயிலின் விதிமுறை.

சைவ முன்னேற்றச் சங்கம் அமைத்துள்ள அருள்மிகு சிவகாமசுந்தரி உடனுறை நடராஜர் ஆலய விதிமுறைகள் பற்றி அறங்காவலரிடமே தாங்கள் கேட்கவேண்டும். கலசம் ஆசிரியர் என்ற பதவி அவர்களின் செயற்பாடுகளிற் குறுக்கிட எனக்கு அநுமதி வழங்காது.

நிறைவாக ஒரு கருத்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். பஞ்சபுராணம் ஓதுவதற்கு மதுபானமும் மாமிச போசனமும் அருந்தாதவராய், ஆசாரமுடையவராய், சிவதீட்சை பெற்றவரே உரியவர் என்பது யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமானின் கருத்து. அதுவே என் கருத்தும். பாடுபவர் ஆணா அல்லது பெண்ணா என்பதன்று.


லண்டனில் No1 நகை மாளிகை
Lakshmis Jewellers
எங்கள் மாதாந்திர
நகைச்சீட்டு
திட்டத்தில் சேர்ந்து
பயனடையுங்கள்
தரமான தங்கத்துக்கு லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்
லட்சுமி ஜுவலர்ஸ்
276 High Street North London E12 6SA UK
Tel : 020 8470 5600 Fax : 020 8470 3448
எங்களுக்கு வேறெங்கும் கிளைகள் இல்லை

WESTERN
Jewellers



வகை வகையான வடிவங்களில் தரமான தங்க நகைகளை குறைந்த விலையில் பெற்று கொள்ள நாடுங்கள் உங்கள் வெஸ்டன் ஜூவலர்ஸ்.

# First Srilankan Jewellery shop in UK

*Specialise in 22ct Gold, White Gold, Platinum & Diamond Jewellery.*

*Tooting Branch.*
230 Upper Tooting Road
London SW17 7EW
**Tel: 020 8767 3445**

*Wembley Branch.*
5, Plaza Parade, 29-33 Ealing Road,
Wembley, Middlesex HA0 4YA
**Tel: 020 8903 0909**



SILK EMPORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel: 02086721900

OPENING HOURS : MONDAY - SATURDAY (10.30 am - 6.30pm) , SUNDAY (11.30am - 6.30pm)